
Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை
28 Ealing Rd Wembley HA0 4TL London
Tel: 02089033063
UNIT 6 Plaza Parade 29-33 Ealing road Wembley HA0 4 YA
Tel: 0208 9000 818



Free Circulation GERMANY , ENGLAND ஆடி. July. 2017


# வெற்றிமணி

Vettimaniy


1950 (67)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A




Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை
Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836


## யாழ்ப்பாணத்தில் ஆறுமுகம் ஆறு




## கனடாவின் தேசிய கீதம் தமிழிலும் ஒலித்திடும்!

## நேற்றைய குமரிகளும் இன்றைய கிழவர்களும்


Dr IN
Page 09




S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜமுத்திரை
15 YEARS CELEBRATING
தடம் பதிக்கிறது
அழகிய ஆடைகள் அனைத்தும்
ஆடித்தள்ளுபடி!
Mr.P.Sritharan. Proprietor
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

செல்வராஜா
Selvaraja Gold House
162b,Mitcham Road
London SW17 9NJ
U.K
Tel:02087673795
0782500269
Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.9

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Germany
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Page.02

# அன்றும் இன்றும் அச்சுக்கலை




**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் யேர்மனி**

ஒரு கட்டுரையை இரவிரவாக அடித்து நித்திரைத் தூக்கத்தில் அதனை பதிந்து வைக்க (Save) மறந்துவிட்டேன். காலையில் எழுந்து கட்டுரையைத் தேடினால் கட்டுரையைக் காணோம்.
அன்று போல் இன்று காகிதத்தில் கட்டுரையை எழுதி, பின்னர் அதனைப் பார்து.பார்த்து, கணனியில் அடிக்கும் வழக்கம் அற்றுவருகின்றது. நேரடியாகவே எம் மனதில் தோன்றும் சிந்தனையை ஊற்றை கைவிரல் நுனிகளுடாக விசைப்பலகையில் (Keyboard) உள்ள எழுத்துக்கள் மீது தட்டிவிட அவை மொனிற்றரில் காகிதத்தில் எழுதுவதுபோல் வந்து விழும்.

இதனால் அந்த கட்டுரையை பதிய மறந்து விட்டால் கதி அதோ கதிதான். மீண்டும் அதனை அடிக்க காகித மூலப்பிரதி கிடைக்காது.

எனவே மீண்டும் கட்டுரையை தொடக்கத்தில் இருந்து அடிக்கவேண்டும். அப்படி அடிக்கும் போது கட்டுரை எழுதுவது ஒரு வேலைபோல் அமைந்துவிடும். முதலில் இருந்த வேகமும், ஆர்வமும், மீண்டும் எழுதும்போது வருவதில்லை.
சில சமயங்களில் அப்படி ஒரு கட்டுரை தவறுவதுகூட மீண்டும் எழுதும்போது,சிறப்பாக அமைந்துவிடுவதும் உண்டு. அதாவது முதல் எழுதும் போது, தேவை அற்ற பலவிடையங்களை எழுதி சுதப்பியிருந்தால், அவை மீண்டும் எழுதும்போது நீக்கப்பெற்று கட்டுரை கச்சிதமாகவும் அமைந்துவிட வாய்ப்பும் ஏற்பட்டுவிடுகிறது.
சில சமயங்களில் எழுதிய கட்டுரை வைரஸ்தாக்கத்தினால் அழிந்துவிடுவதும் உண்டு.
இந்த அனுபவம் திரைப்படங்களில் கதை 50 ஆண்டுகளுக்கு முன் என்று சொல்லிவிட்டு ( Play back) கறுப்பு வெள்ளையில் கதை காட்டுவது போல் நானும் 40,50 வருடங்களுக்கு முன் இருந்த நான் கண்ட சம்பவங்களை உங்களுடன் பகிர ஆசைப்படுகின்றேன்.
இது சின்னச் சின்ன சங்கதியாக இருந்தாலும், நம் எதிர்காலச் சந்ததிகளுக்கு இவை தெரியாமலே போய்விடும் என்பதனால் அறியத்தருகின்றேன்.

## அன்றும் இன்றும் அச்சுக்கலை

இந்த அச்சுக்கலையின் தந்தையாக சீனதேசத்தையே குறிப்பிடுவர். (கி.பின் 265-420) காகிதத்தைக் கண்டுபிடித்தவர்களும் அவர்களே. சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம். அதனால் அந்தச் சித்திரத்தைப் பொறிக்கும் முயற்சி அச்சுக்கலையாக விஸ்வருபம் எடுத்தது.

ஆரம்ப காலத்தில் செய்திகள், தகவல்கள் கல்வெட்டுக்களாகவும், வாய்மொழி வழியாகவும், தொடர் பதிவாகத் தொடர்ந்து வந்தன.
வாய் மொழி வாய்மொழியாக முதியவர்கள் அப்போது, தாம் பேசிடும் போது, மூச்சுக்கு மூச்சு 'நாம் அப்பபெல்லாம் இப்படி அல்ல அப்படிச் செய்வோம்" என்று பழைய நடைமுறைகளைப் பதிவு செய்வார்கள்.
முன்பு எல்லாம் நாம் ஒரு திருமணம் என்றால் ஊரெல்லாம் கூடிப் பந்தல் போடுவோம், இப்படி அப்பெல்லாம், அப்பெல்லாம், என்று சொல்லும் வாய்வழித் தகவல் இன்றும் தொடர்கிறது என்றால், இந்த அச்சு எழுத்துப் பதிவுகள் இல்லாத நேரத்தில் அவையே உச்சத்தைப் பெற்று இருக்கவேண்டும்.
இப்படி வாய்வழியாக வந்த ஒருகதை தாயகத்தில் ஈழகேசரி ஸ்தாபகர் திரு.நா.பொன்னையா வள்ளல் பற்றியும் உண்டு.
அவர் சுன்னாகத்தில் திருமகள் அழுத்தகம் என்னும் அச்சகத்தை நிறுவினார். இலங்கைப் பாடப் புத்தகங்களுக்கு பல உப நூல்களை அடிப்பதில், இலங்கையில் பிரசித்தம் பெற்றது இந்த அழுத்தகம். இலக்கிய மஞ்சரி, பாலபாடம், பாலீபோதினி, சைவசமயபோதினி மற்றும் குகன் தமயந்தி அரிச்சந்திரா என பலசிறு புத்தகங்களும் அங்கு இருந்து வெளியாகினவையே. அவர்களது அச்சகத்தில் அடிக்கும் மலர்கள், பெரும் புத்தகங்கள் யாவும் சிறப்பான காகிதத்தில் தரமிக்கதாக அச்சு ஏறி வலம் வந்தன.
இந்த சிறப்பான கடதாசிகள் யாவும் மிகவும் பழையன என்றும், அவை சீனதேசத்தில் இருந்து வந்தவை என்றும் வாய்வழிக் கதை ஒன்று உண்டு.
சீனாவில் இருந்து வந்த காகிதக்கப்பல் ஒன்று, தரைதட்டி காகேசன்துறைப் பக்த்தில் நிறுத்தப்பட்டபோது அதில் உள்ள காகிதத்தை விற்க முற்பட்டனர் என்றும், அதனை உடனடியாக திரு நா.பொன்னையா அவர்கள் தனது பெரும் பனைக்காணிகளை விற்று, அந்தப்பணத்தில் கடுதாசிகளைவாங்கி தனது அச்சகத்தின் தரத்தை உயர்த்தியதாகவும் ஒரு கதை உண்டு.

நன்றி: தமிழர் தகவல் (கனடா) ஆண்டுமலர் 2017

தொடரும்












**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 250



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0163 199 2 333**

e-mail: vettimaniy@hotmail.com

**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

**Vettimaniy Ltd**
Company No: 8876276

# கனடாவின் தேசிய கீதம் இனித் தமிழிலும் ஒலித்திடும்!

# கனடாவில் தமிழ் பெறும் பெரும் கௌரவம்!

**கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் கனடா தேசியகீதத்தை தமிழ் ஆக்கம் செய்து நம் மண்ணுக்கும் பெருமை சேர்க்றார்.**



பாடகி சுபா சங்கரன் - கவிஞர் வி.கந்தவனம்

Toronto Symphony Orchestra என்கிற இசைக்குழு கனடாவின் 150 வது பிறந்த நாளை முன்னிட்டு கனடாவில் அதிகம் பேசப்படும் 12 மொழிகளை தேர்வு செய்து அந்த மொழிகளில் கனடியதேசிய கீதத்தை பாடி வெளியிட்டுள்ளது.

தேர்வு செய்பட்ட 12 மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. பல ஆண்டுகளுக்கு முன்னரே கனடிய தேசியகீதத்தை கனடாவில் வசிக்கும் நாம் தாயகத்தைச் சேர்ந்த கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்.

(இவரது எழுத்தாளன் என்னும் நூலினை வெற்றிமணி 1995 ஆண்டு யேர்மனியில் வெளியிட்டு அவரைக் கௌர வித்தது.)

தற்போது அந்தப்பாடலே ஒருசில மாற்றங்களோடு கனடிய தமிழ் தேசியகீதமாக ஒலிக்கிறது. இந்தப்பாடலை சுபா சங்கரன் என்ற பெண்மணிபாடியுள்ளார்.

கனடாவில் உள்ள சக்திமிக்க மொழியான தமிழ், அரபி, அமெரிக்கசைகை மொழி, கிரேக்கம், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலியன்,சீன மாண்டரின், பஞ்சாபி, ஸ்பானிஷ், டாகாலோக் ஆகிய 12 மொழிகளில் கனடா தேசிய கீதம் வெளியிடப்பட்டுள்ளது.

வழக்கமாக தமிழர் பண்பாட்டை கவுரவிக்கும் கனடா தற்போது அந்நாட்டு தேசிய கீதத்தை தமிழில் வெளியிட்டு தமிழுக்கு மகுடம் சூட்டியுள்ளது. கனடா நாட்டில் தமிழ்மொழிக்கு என்று எப்போதும் தனி மரியாதை உண்டு. தமிழர்களின் கலாச்சார பண்டிகைகளை கொண்டாடுவது, பொது அறிவிப்புகளை தமிழில் வெளியிடுவது என்று உலக தமிழர்களை கனடா சமீபகாலமாக மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகிறது.

Toronto Symphony Orchestra




,இதுவரை ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழியில் மட்டுமே ,இருந்த கனடா தேசியகீதம், தற்போது நாடு தழுவிய நிலையில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் மற்றும் பேசப்படும் தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் வெளியிடப் பட்டுள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்த கனடா பிரதமர் ஜஸ்டின், தமிழர்களின் கலாச்சார பண்டிகையான பொங்கலுக்கு தமிழில் வாழ்த்து தெரிவித்தார்.






தமிழர்களின் சிலம்பம் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டு களையும் விளையாடி உலகத் தமிழர்களுக்கு,இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.

இந்நிலையில் தற்போது கனடா நாட்டு தேசிய கீதத்தை Toronto Symphony Orchestra என்கிற இசைக்குழுவும் தமிழில் வெளியிட்டு தமிழுக்குப் பெருமை சேர்த் துள் ளார்கள்

## வெற்றிமணி பத்திரிகையின் 250 வது இதழ் இது

### வெற்றிமணி மிகப் பணிவுடன் சில முதல்கள்!

**யேர்மனியில் வர்ணத்தில் வெளிவந்து, தொடரும் முதலாவது இலவசப்பத்திரிகை வெற்றிமணி .**

**பல புலம்பெயர் படைப்பாளிகளின் நூல்களை (யேர்மனியில்) வெளியிட்ட பத்திரிகை வெற்றிமணி.**

**யேர்மனியில் முதலாவதாக ஆன்மீக சஞ்சிகை (சிவத்தமிழ்) வெளியிட்டது வெற்றிமணி 2004**

**யேர்மனியில் முதலாவது ஓவிய சிற்பக்கண்காட்சி 1981 (வெற்றிமணி ஆசிரியர் )**

**யேர்மனியில் முதலாவது வெளிவந்த வர்ணமலர் "புதியவடிவங்கள்! 1990**

**ஐரோப்பாவிற்கான தமிழர்தகவல் விருதினை பெற்ற முதல் பத்திரிகை ஆசிரியர்**



பிரதம ஆசிரியர்
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

**(இத்தகவல்கள் கையெழுத்துபிரதிகள், போட்டோக்கொப்பி, வர்ணங்கள் தவிர்த்து, அச்சில் வந்தவை மட்டுமே! )**

**வெற்றிமணியின் வெற்றிப் பயணத்தில் கூட வந்தவர்களுக்கும், வருபவர்களுக்கும், இதயம் கனிந்த நன்றிகள்**



# இலங்கையில் பாரதி

முருகபூபதி, ஆஸ்திரேலியா







**பேராசிரியர் கைலாசபதி சொல்லச் சொல்ல எழுதி அவரது இறுதி உரையுடன் வெளியான பாரதி நூற்றாண்டின் "மகாகவி பாரதி; நூல்**

பேராசிரியர் க. கைலாசபதி தமது வாழ்நாளில் ஆயிரக்கணக்கான பக்கங்களை தமது கையினாலேயே எழுதியவர். அவருடைய நூல்களின் எண்ணிக்கையிலிருந்தும், பத்திரிகைகள், இதழ்கள், சிறப்பு மலர்கள் மற்றும் ஏனைய படைப்பாளிகளின் நூல்களுக்கு எழுதியிருக்கும் முன்னுரைகளிலிருந்தும் பல்லாயிரம் பக்கங்களை அவர் தமது கையெழுத்தினாலேயே வரைவாக்கியிருப்பதை அறிவோம். ஆனால், அவர் சொல்லச் சொல்ல எழுதப்பட்ட ஒரு முதலுரை வெளிவந்த நூல்பற்றி அறிந்திருப்போமா...?
அவர் கொழும்பு அரச மருத்துவமனை படுக்கையிலிருந்தவாறே சொல்லச் சொல்ல எழுதப்பட்ட முதல் உரைதான் அவரது இறுதி உரையாகவே அமையுமென்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த உரையை அவர் 27.11.1982 திகதி எழுதத் தொடங்கினார். ஆனால் எதிர்பாராதவிதமாக அவரைத் தாக்கிய நோயின் உபாதையினால் அவரால் தொடர்ந்தும் எழுத முடியாமற் போனது. எனினும் தாம் எடுத்த எந்தக் கடமையிலிருந்தும் தவறாமல் சிறந்த நிர்வாகியென்று பெயரெடுத்த அந்த ஆளுமை, அந்தக் கடமையையும் நிறைவு செய்துவிட்டே 06.12.1982 ஆம் திகதி தமது கண்களை மூடிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் இலங்கையில் பாரதி நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்ற காலப்பகுதியிலேயே நடந்தது.
அக்காலகட்டத்தில் ஒரேயொரு நூல்தான் தமிழில் பாரதிபற்றி அச்சிடப்பட்டு வெளியானது ஆச்சரியமானது. அதேசமயம் பாரதி சம்பந்தமான இரண்டு நூல்கள் சிங்களத்தில் வெளியானமை பேராச்சரியமானது.
தமிழில் வெளியான நூலின் பெயர் 'மகாகவி பாரதி' இதனை எழுதியவர் 'எஸ்.தி' என்றும், "திரு' எனவும் இலங்கை ஊடகங்களில் நன்கு அறியப்பட்ட எஸ்.திருச்செல்வம்.
யாழ். ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி ஆகியவற்றிலும், கொழும்பில் தினகரனிலும் பணியாற்றிய எஸ்.திருச்செல்வம் இலங்கைப் பத்திரிகை உலகில் சவால்களையும் சங்கடங்களையும் மட்டுமல்ல உயிர் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியவர். இந்தியாவிலிருந்து அமைதி காக்க வந்தவர்களினால் தடுத்து வைக்கப்பட்டவர்.

அந்தப் படைக்கு ஆதரவாக இயங்கிய ஓர் ஆயுதக் குழுவினால் தமது ஏகபுத்திரன் அகிலனையும் பறிகொடுத்தவர். கனடாவுக்குப் புலம்பெயர்ந்து ஷதமிழர் தகவல்' என்ற இதழையும் நீண்டகாலமாக நடத்தி வருவதுடன், வருடாந்தம் ஆளுமைகளின் சேவைகளையும் பாராட்டி விருது வழங்கி கௌரவித்தும் வருபவர். 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தொடர்ச்சியாக, தங்குதடையின்றி, மாதாந்தம் கனடாவில் வெளியாகும் மூத்த தமிழ் இதழ்தான் தமிழர் தகவல். ஓவ்வொரு பெப்ரவரி மாதமும் ஆண்டு மலர் வெளியீடும் விருது விழாவும் இடம்பெறுகிறது. இதுவரை 26 ஆண்டு மலர்கள் வெளியாகியுள்ளன. கனடா உட்பட தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து பல்வேறு பணிகளுக்காக 239 பிரமுகர்கள் விருதுடன் தங்கப் பதக்கமும் பெற்றுள்ளனர்.

கனடியத் தமிழர் சமூகத்தில் விருது வழங்கலை முதன்முதலில் ஆரம்பித்து வைத்த (1992) பெருமை தமிழர் தகவலுக்குரியது. இலண்டன் பி.பி.சி. தமிழோசை சோ. சிவபாதசுந்தரம், வீரகேசரி ஆசிரியர் க. சிவப்பிரகாசம், ஒலிபரப்பாளர் க. விமல் சொக்கநாதன், கவிஞர் அம்பி, மூத்த பத்திரிகையாளர் பொன். பாலசுந்தரம் (இலண்டன்), ஜேர்மனி வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன், தொழிற்சங்கவாதி ஐ.தி. சம்பந்தன், பேராசியர் சேர். சபாரட்ணம் அருள்குமரன், விஞ்ஞானி சஞ்சயன் முத்துலிங்கம் (கலிபோர்னியா), பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் (மிக்சிகன்), பேராசிரியர் அஜித் யோகநாதன் (ஜோர்ஜியா), வியட்நாம் யுத்தத்தில் எரிகுண்டினால் காயம்பட்ட கிம் புக் ஆகியோர் கனடாவுக்கு வெளியிலிருந்து வந்து விருது பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் தகவல் வெளியீட்டுக்கு அப்பால் பல துறைசார்ந்தவர்களின் நூல்களை அவ்வப்போது வெளியிட்டுள்ளது. கவிஞர் அம்பி, இலண்டன் நூலகர் என். செல்வராஜா, அதிபர் கனகசபாபதி, கனகேஸ்வரி நடராஜா (சிட்னியில் வசிக்கும் பராசக்தி சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரி), தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் வி.கந்தவனம், பண்டிதர் எம்.எஸ். அலெக்சாண்டர், லலிதா புருடி, பிரெட் பாலசிங்கம் ஆகியோரினது உட்பட இருபதுக்கும் அதிகமானவர்களின் நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.


எஸ்.திருச்செல்வம்

திருச்செல்வம் இலங்கையில் வாழ்ந்த இறுதிக் காலத்தில் "முரசொலி' என்ற நாளிதழை அவரே பங்களித்து ஆரம்பித்து நடத்தியவர். பல இலக்கியப் படைப்புகளுக்கு களம் தந்து அவற்றை நூலுரு விலும் வெளியிட ஆவன செய்தவர். 1980 1982 காலப்பகுதியில் கொழும்பில் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் என்ற அமைப்பைத் தோற்றுவித்து,தலைநகரில் பல கலை இலக்கிய நிகழ்ச்சிகளையும் சந்திப்புகளையும் பாராட்டு நிகழ்வுகளையும் நடத்துவதில் தீவிரமாக முன்னின்று உழைத்தவர்.

பாரதி நூற்றாண்டுக் காலத்தில் இலங்கையில் தமிழ் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளுக்குத் தேவைப்பட்ட குறிப்புகளை மாணவர் புரியும் வண்ணம் எளிய முறையில் எழுதப்பட்ட நூல்கள் இருக்கவில்லை என்ற பெரும் குறையைப் போக்கியவர் எஸ். திருச்செல்வம்.

குறிப்பிட்ட இந்த நூலின் முதல் உரையில் இறுதிப் பந்திகளை பேராசிரியர் கைலாசபதி படுக்கையிலிருந்து சொல்லச் சொல்ல எழுதி முடித்தார் இவர்.

"மனிதர்களை மாபெரும் சமுதாயப் பிரச்சனைகள் எதிர்கொள்கின்றன. மற்றவர்களைவிட யார் இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அதிகமாகப் பணி புரிகிறார்களோ அவர்களைத்தான் மகாபுருஷர்கள் என்று அழைக்கின்றோம். சுப்பிரமணிய பாரதி தனது காலத்தில் யுகத்து கலை, இலக்கிய, தத்துவப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பெருமளவில் உதவியவன் என்பதனாலேயே அவனை மகாகவி என்றும் யுகக்கவியென்றும் போற்றுவதோடு அவனது நூற்றாண்டு நிறைவையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்" என்று இந்த நூலுக்கு முதலுரை வழங்கியிருக்கிறார் கைலாசபதி.

இச் சிறுநூலுக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

(நன்றி: காலைக்கதிர், யாழ்ப்பாணம் - 21.5.2017)




Bochum
முற்பதிவுக்கு முந்துங்கள்
Lucky Fly Reisebüro
Luckyfly
Lucky Fly Reisebüro வழங்கும்
சிறப்பு விலையில் Rail and Fly
Sondertarif Frankfurt -Colombo
Sep,Okt,Nov,Dez,Jan,Feb
Ab : 579 €
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
இந்தியா செல்வதற்கான 1 மாத, 2. மாத, 3. மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்
Frankfurt- Colombo
Gulf Air
Allee Str.38-40a
44793 Bochum
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Email: info@lucky-fly.de
www.Lucky-fly.de
Hinflug: Mi,Do,Fr.
Rückflug :Nur:Di,So.
ab Stunden Transit mit Hotel
6 மணித்தியாலம் Transit ல் செல்பவர்களுக்கு
Hotel தங்குமிட வசதியுடன்
Mob:No: 0179 1484 892
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram
WESTERN UNION WU
moving money for better


TKS BEST FOODS
PREMIUM QUALITY
5வது ஆண்டில் காலடி பதிக்கும் எமது ஸ்தாபனம்
5,000 யூரோ பெறுமதியான பரிசு பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்..!
காலம் : 02.09.2017
(அன்று மட்டுமே)
+49 231 950 468 83 | +49 151 253 004 00
+49 231 950 468 82
info@tks-bestfoods.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137 Dortmund



# பூமி ஒரு கிராமம் ஆனால் எப்படி இருக்கும்?

நமது புவியில் தற்போது ஏறத்தாழ 730 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் சுமார் 350000 குழந்தைகள் பிறந்து, 150000 லட்சம் பேர்கள் இறக்கின்றார்கள். ஆனால், இவ்வாறான பெரிய எண்களுடன் புவியின் புள்ளி விவரங்களை வர்ணிப்பது கஷ்டம் தானே? எனவே, நான் இன்று உங்களை ஒரு கற்பனை உலகிற்கு அழைத்துச் சென்று, நமது புவியின் சில சுவாரசியமான புள்ளி விவரங்களை அறியத் தருகிறேன், படிக்கின்றீர்களா?

சரி, வாருங்கள் உங்களை எனது கற்பனை உலகிற்கு அழைத்துச் செல்கிறேன். நான் சொல்வதை நன்றாகக் கற்பனை பண்ணிப் பாருங்கள். நமது பூமியை ஒரு சிறிய கிராமத்தின் அளவிற்குச் சுருக்கி விடுவோம். ஆனால், அந்தக் கிராமத்தில் 730 கோடி மக்களுக்குப் பதிலாக, நூறே நூறு மக்கள் மட்டும் தான் வாழ்கின்றார்கள் என்று எடுத்துக் கொள்வோம். இப்படி வெறும் 100 மக்கள் தான் வாழ்ந்தால், அந்த ஊரில் 60 பேர் ஆசியாக் கண்டத்தையும், 10 பேர் ஐரோப்பாக் கண்டத்தையும், 14 பேர் அமெரிக்காக் கண்டத்தையும் மற்றும் 16 பேர் ஆபிரிக்காக் கண்டத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இவர்களில் 49 பெண்களும், 51 ஆண்களும் காணப்படுவார்கள். இந்த 100 பேர்களில் 30 வெள்ளையர்களும், 70 வெள்ளை அல்லாதவர்களும் அடங்குவார்கள்.

6 பேர்களிடம் மட்டுமே அந்த ஊரின் 59 சதவீதமான சொத்து முழுதும் சேர்ந்திருக்கும். 80 பேர்களின் வீட்டுச் சூழல் திருப்தியான நிலையைக் கொண்டது இல்லை. 70 பேர்களுக்கு ஒழுங்காக எழுதப் படிக்கத் தெரியாது. தொடர்ந்து 50 பேர்கள் பட்டினி இருப்பார்கள். 12 பேரிடம் கணினி இருக்கும், ஆனால் அவற்றுள் 3 பேருக்கு மட்டுமே இணையத்தை (internet) உபயோகிக்க வசதி இருக்கும். இந்த 100 பேர்களில் ஒரே ஒருவர் மட்டும் தான் பட்டப் படிப்பு முடித்தவராக இருப்பார். ஒருவர் இறக்க, இருவர் பிறப்பார்கள்.

நமது பூமியில் வாழும் மக்களின் நிலைமையை இவ்வாறு புள்ளிவிவரம் ஊடாக, அதுவும் இப்படி ஒரு சிறிய கிராமத்தை வைத்து விளக்கும் போது தான், சில முக்கியமான உண்மைகள் தெரியவருகின்றன. அது என்ன தெரியுமா? நண்பர்களே, உங்களிடம் உண்பதற்கு உணவு, போடுவதற்கு ஆடைகள், இருப்பதற்கு ஒரு வீடு மற்றும் தூங்குவதற்கு ஒரு கட்டில் இருந்தாலே போதும், நமது புவியில் வாழும் 75 சதவீதமானோரை விட நீங்கள் பணக்காரராக இருக்கின்றீர்கள் என்று தான் அர்த்தம்! உலகில் வாழும் பலருடன் ஒப்பிடும் போது, உண்மையில் நாம் கொடுத்து வைத்தவர்கள் தான், இல்லையா?


## இந்த உலகில் வாழும் நீங்கள் கூட ஒரு தனி உலகம், தெரியுமா?

**Dr.நிரோஷனின் அதிசய உலகம்**

மனிதர்களாகிய நாங்கள் அனைவருமே, இந்த உலகில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். அது சரி தானே? ஆனால் இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும், உண்மையில் ஒரு தனி உலகம் என்பது உங்களுக்குத் தெரியுமா? அடடா, வழக்கம் போல் உங்களைக் குழப்ப ஆரம்பித்துவிட்டேன் என்று யோசிக்கின்றீர்களா? சரி சரி, குழப்பம் ஒன்றும் வேண்டாம், இதற்குப் பின்னால் அப்படி என்ன தான் மறைந்து இருக்கின்றது என்பதைத் தெரிய வேண்டுமென்றால் தொடர்ந்து படியுங்கள். ஒவ்வொரு மனிதனும் ஒரு தனி உலகம் என்று கூறியிருந்தேன். ஆனால் அது யாருக்கு உலகமென்று தெரியுமா? ஒவ்வொரு மனிதனிலும் நமது கண்களுக்கே தெரியாமல் நுண்ணுயிரிகள் எனப்படும் Microorganisms வாழ்ந்து வருகின்றன.

இவை நுண்ணோக்கியின், அதாவது Microscope இன் உதவியுடன் மட்டும் தான் பார்க்கக் கூடிய, தனிக்கலம் (Single Cell) அல்லது கூட்டுக் கலங்களால் (Multicellular) ஆன உயிரினங்கள் ஆகும். இவற்றைத் தீ நுண்மம் (Virus) கிருமி (Bacteria), பூஞ்சை (Fungi) மேலும் மூத்தவிலங்கு (Protozoa) என்று முக்கிய நான்கு வகையாகப் பிரிக்கலாம். பெரும்பாலான நுண்ணுயிரிகள் ஆபத்தானவை என்றாலும், அவற்றுள் சில, மனிதனுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கின்றன. உதாரணத்திற்கு வைரசுகள் மற்றும் கிருமிகள் பலவிதமான நோய்களுக்குக் காரணமாக இருந்தாலும், மனித உடலில் வாழும் அனைத்துக் கிருமிகளும், நமது உடலின் செயல்பாட்டுக்கு மட்டும் இல்லாமல், நாம் உயிர் வாழ்வதற்கும் உதவுகின்றன என்றால் நம்புவீர்களா?

சரி, நமது உடலில் எத்தனை நுண்ணுயிரிகள் வாழ்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் நினைப்பது போல் நூறு அல்லது ஆயிரம் இல்லை. பல கோடி கோடி (, 1.000.000.000.000.000) நுண்ணுயிரிகள் நமது உடலில் மற்றும் உடலினுள் வாழ்கின்றன என்பது தான் உண்மை! குறிப்பாகக் கிருமிகளை எடுத்துக்கொண்டால், புவியில் காணப்படும் கிட்டத்தட்ட 3.000.000 கிருமி வகைகளில், நமது உடலில் குறைந்தது 10.000 கிருமி வகைகள் வாழ்கின்றன! உதாரணத்திற்கு நமது வாயினுள் மட்டுமே 10 கோடிக்கும் அதிகமான கிருமிகள் வசிக்கின்றன.



இதனுடன் ஒப்பிடும் போது, நமது குடலில் வாழும் கிருமிகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாக இருக்கின்றது. இதில் வியப்பூட்டும் விஷயம் என்ன தெரியுமா? நமது உடலின் 99,9 சதவீதமான இடங்களில் நுண்ணுயிரிகள் காணப்படுகின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

நமது உடலில் வாழும் இந்த அனைத்துக் கிருமிகளையும் ஒன்றாக எடுத்து, ஒரு தராசில் வைத்துக்கொண்டால், அதன் நிறை 2kg ஆக இருக்கும். நம்பவே முடியவில்லை அல்லவா?

சரி இனி நீங்கள் கூறுங்கள், இந்த நுண்ணுயிரிகள் பற்றிய தகவலை அறிந்ததும் உங்களுக்குத் தற்போது என்ன தோன்றுகின்றது? பயமாக இருக்கிறதா அல்லது அருவருப்பாக இருக்கிறதா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

எங்கள் விழியும் ஒளியும் உழைக்கும்...
உங்கள் நிகழ்வும் மகிழ்வும் நிலைக்கும்!
Koness Fotos
Oberhausen
tp: 0157 39 53 26 13
www.konessfotos.de

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

# யாழ்ப்பாணத்திற்கு ஓர் ஆறு
# அது ஆறுமுகம் ஆறு

**"வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்"**




**யூட் பிரகாஷ்** அவுஸ்ரேலியா

"வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என்பது, பொலநறுவையை இராசதானியாககொண்டு ஆட்சி செய்த சிங்கள மன்னன் மகா பராக்கிரம பாகுவின் புகழ் மிக்க கூற்றுக்களில் ஒன்றாகும். பேச்சோடு மட்டும் நின்று விடாது, வானிலிருந்து விழும் நன்னீர், கடலைச் சென்றடைவதைத் தடுக்க, பராக்கிரம சமுத்திரம் என்ற மாபெரும் நன்னீரேரியை பராக்கிரமபாகு கட்டுவித்தான். பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கைத் தீவு தெற்காசியாவின் தானியக் களஞ்சியமாக திகழ்ந்தது என்பது வரலாறு.

யாழ்ப்பாணத்திற்கு தண்ணீரப் பிரச்சினை, ஒரு பெரும் பிரச்சினை. யாழ்ப் பாணத்தின் பிரதான தண்ணீர் மூலம் கிணறுகள் தான். கிணறுகளிலிருந்து துலா, கப்பி, வெறும் கயிறு பயன்படுத்தி தண்ணீர் மொள்ளுவது யாழ்ப்பாணத்திற்கேயுரிய தனித்துவம். தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் தடைபடாத மின்சாரமும் வந்த பின்னர், கப்பியும் துலாவும் காணாமல் போய் விட்டன.

அந்தக் காலத்தில், யாழ் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களிற்கு நிலாவறை கிணற்றிலிருந்து குழாயில் நன்னீர் வரும், அதுவும் காலையில் ஒரு மணி நேரம் மாலையில் ஒரு மணி நேரம் மட்டும். செல்வாக்குள்ளவர்கள் மாநகர சபையின் அனுமதி பெற்று தங்கள் வீடுகளிற்குள் தண்ணீர் குழாயை பொருத்துவார்கள். மற்றவர்கள் வீதியில் இருக்கும் பொதுக் குழாயில், குடங்களிலும் வாளிகளிலும் தண்ணீர் எடுக்க வருவார்கள். தண்ணீர் குழாயடியில் இருந்து நாட்டு நடப்பு கதைக்கவும் அரசியலை அலசவும் ஒரு கூட்டம் வந்து சேரும்.

பராக்கிரம்பாகுவின் சிந்தனையை அடியொற்றி, 1930களில் இலங்கையின் சட்டசபையில் உறுப்பினராக இருந்த மு பாலசிங்கம் என்பவரால் யாழ்ப்பாண தீபகற்பத்தின் களப்புக்களை நன்னீரேரிகளாக மாற்றும் திட்டம் முன் மொழியப்பட்டது. யாழ்ப்பாண தீபகற்பம், ஆறுகள் எதுவுமற்ற ஒரு வரண்ட பிரதேசம், ஆனால் நிலத்தடி நீர்வளமிக்க பிரதேசம். இந்த நிலத்தடி நீரையும் கடும் உழைப்பையும் வளமான மண்ணையும் மூலதனமாக்கி, யாழ்ப்பாண விவசாயி, விவசாயத்தில் கோலோச்சுவான்.

இலங்கைத் தீவு 1948ல் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சிங்கள பெரும்பான்மையின ஆட்சிக்குள் வந்த பின்னர், இலங்கையின் நீரப்பாசனத்துறை (irrigation) திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த ஆறுமுகம் என்பவரால், "யாழ்ப்பாணத்திற்கு ஒரு ஆறு" (River to Jaffna) திட்டம், முன் மொழியப்பட்டது. ஆறுமுகத்தால் முன்மொழியப்பட்டதால், "ஆறுமுகம் ஆறு", எனும் பெயரை இந்தத் திட்டம் பெற்றது. யாழ்ப்பாணத்தில் மாரி காலத்தில் மட்டும் மழை பெய்யும். மூன்று நான்கு மாதங்கள் பொழியும் மாரி மழை நீரை கடலிற்கு போவதைத் தடுத்து, முறையாக சேகரித்து, கோடைக்காலத்திலும பயன்படுத்த, இந்த யாழ்ப்பாண ஆறு திட்டம் வழிசமைக்கும்.

வன்னியின் வளமான கனகராயன் ஆறு, ஓமந்தைக்கு அண்மையில் உற்பத்தியாகி, புளியங்குளம், மாங்குளம், கிளிநொச்சி என்று வன்னியின் பெரு நிலங்களைத் தழுவிச் சென்று, ஆனையிறவு கடவையின் கிழக்குப்பகுதியில், சுண்டிக்குளத்திற்கு அண்மையில் கடலுடன் கலக்கிறது. "ஆறுமுகம் ஆறு" திட்டத்தின் ஆரம்பப் புள்ளி, இந்த கனகராயன் ஆறு சுண்டிக்குளத்தடியில், ஆனையிறவு ஏரியில் கலப்பது தான்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தை வன்னி பெருநிலப்பரப்புடன் இணைப்பது ஆனையிறவு கடவை. ஆனையிறவு பாலத்தின் கிழக்குப் பக்கம் நன்னீராகவும், பாலத்தின் மறுபுறமான மேற்குப் பக்கம் உவர்நீராகவும் இருப்பதன் காரணம், இந்த கனகராயன் ஆற்றின் நன்னீர், ஆனையிறவு பாலத்தின் கிழக்குப் பகுதியில் கலப்பது தான்.

ஆனையிறவு பாலத்தின் கீழ் ஒரு தடையை எற்படுத்தி, ஆனையிறவு நீரேரியின் கிழக்குப் பகுதியில் சேரும் நன்னீரை, ஆனையிறவு ஏரியின் மேற்குப் பகுதியில் இருக்கும் வங்கக் கடலின் உவர் நீரோடு சேரவிடாமல் தடுப்பது, யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தின் முதற் கட்டம்.

இரண்டாவது கட்டம், ஆனையிறவு ஏரியின் கிழக்குப் பக்கம், சுண்டிக்குளத்திற்கு அண்மையில், ஒரு ஒடுங்கிய நிலப்பரப்பினூடாக இந்துமாக்கடலில் கலக்கும் நன்னீரை தடுக்க, ஒரு தடுப்பரண் கட்டுவது. சுண்டிக்குளம் தடுப்பரண், ஆனையிறவு ஏரியின் நன்னீரை கடலோடு கலக்க விடாமல் தடுப்பதோடு, ஆனையிறவு ஏரியில் அளவுக்கதிகமாக தண்ணீர் நிறைந்தால், வெள்ளத்தை தடுக்க, மிதமிஞ்சிய நீரை கடலுக்குள் பாய விடும் பொறிமுறையை கொண்டிருக்கும்.

ஆறுமகம் ஆறு திட்டத்தின் மூன்றாவதும் முக்கியமானதுமான கட்டம், முள்ளியான் வாய்க்கால். 12 மீட்டர் அகலமும், சுமார் 4 கிலோ மீற்றர் நீளமுடைய ஒரு வாய்க்காலை, ஆனையிறவு ஏரியின் வடக்கு பக்கமாக, முள்ளியான் கிராமத்தினூடாக அகழ்ந்து, ஆனையிறவு ஏரியின் நன்னீரை, வடமராட்சி நீரேரியுடன் இணைப்பது தான் முள்ளியான் வாய்க்கால். ஆறுமுகம் ஆற்றுத் திட்டத்தின் இதயப்பகுதி தான் முள்ளியான் வாய்க்கால் என்று சொல்லலாம். தெற்கே ஆழியவளைக்கு அண்மையில் தொடங்கும் வடமராட்சி நீரேரி, உடுத்துறை, மருதங்கேணி, பால்ராஜ் அண்ணர் தரையிறங்கிய குடாரப்பு, பருத்தித்துறை தாண்டி, தொண்டமனாறில் உள்ள செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அண்மையில் கடலுடன் கலக்கிறது.

யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தின் நாலாவது கட்டம், செல்வச்சந்நிதி தடுப்பரண். சுண்டிக்குளம் தடுப்பரணைப் போல், நன்னீரோடு உவர்நீர் கலப்பதை தடுப்பது, மிதமிஞ்சிய நன்னீரை கட்டுக்கோப்பாக கடலிற்கு வழிய விட்டு வெள்ளத்தை தடுப்பது என்ற இரட்டை நோக்கங்களைக் கொண்டதாக இந்த செல்வச்சந்நிதி தடுப்பரண் அமைக்கப்படும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்




சிவ பார்வதி ஜோதிட நிலயம்

SHIVA PARVATI ASTROLOGY CENTRE

சோதிட துறையில் 9 வது சந்ததியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
Pandith Kallidas




உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்,திருமணம்,கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்

தொடர்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

Pandith Kallidas
Wilhelm Str.27
59067 Hamm
+49(0) 151 44 921 486
+49(0) 152 15 670 175






06ம் பக்கத் தொடர்ச்சி

# யாழ்ப்பாணத்திற்கு ஓர் ஆறு.....

வடக்கே செல்வச் சந்நிதி அணை, தெற்கே ஆழியவளை, கிழக்கிலும் மேற்கிலும் நிலப்பரப்புக்கள், முள்ளியானில் ஆனையிறவு நன்னீரேரியிலுருந்து வரும் தண்ணீர் என்று வடமராட்சி களப்பை ஒரு நன்னீரேரியாக மாற்றிவிடும் திட்டமே ஆறுமுகம் ஆறு திட்டத்தின் பிரதான குறிக்கோள். ஆனால், வல்லை வெளியின் மேற்கே ஆரம்பமாகும் உப்பாறு எனும் சிறிய களப்பு வடமராட்சி ஏரியுடன் கலக்கிறது.

வடமராட்சியில் தொடங்கி, மேற்காக வளைந்து நெளிந்து சென்று, அரியாலையடியில் கடலுடன் கலக்கிறது, இந்த உப்பாறு. அரியாலையிலிருந்து கடல் நீர் வந்து வல்லை வெளி தாண்டி, வடமராட்சி நன்னீரேரியை மாசுபடுத்துவதைத் தடுக்க, அரியாலையிலும் ஒரு தடுப்பரண் அமைக்கப்பட வேண்டும்.

அரியாலை தடுப்பரணுடன் முழுமையடையும் யாழ்ப்பாண ஆறு திட்டம், யாழ்ப்பாண தீபகற்பத்தில் இரு நன்னீர் ஏரிகளை உருவாக்கி, மாரி கால மழை நீரை சேகரித்து, கோடை காலத்தில் யாழ்ப்பாணத்தாருக்கு நீர் வளங்கும் நோக்கத்தை நிறை வேற்றும். அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள கிணறுகளின் நன்னீர் பெருக்கத்தையும் இந்த இரு நன்னீரேரிகளின் உருவாக்கம் ஊக்கப்படுத்தும்.

1950களிலிருந்து கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமான வேலைகளால், ஆனையிறவு, சுண்டிக்குளம், தொண்டமனாறு, அரியாலை ஆகிய இடங்களில் கட்டப்பட்ட அணைக்கள் பழுதாகி விட்டன. முள்ளியான் வாய்க்காலும் தூர்வடைந்து போயுள்ளது.

ஆறுமுகம் ஆறு எனும் யாழ்ப்பாணத்திற்கான ஆறு எனும் திட்டத்தை நிதியுதவி வழங்கி செயற்படுத்த இன்று ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. ஆறுமகம் ஆறு திட்டம் அமுலாக்கப்படும் அதே வேளை, யாழ்ப்பாண தீபகற்பத்தில் நிலத்திடியில் சேரும் மலக்கழிவுகளை சுகாதார முறையில் அகற்ற முறையான ஒரு கழிவகற்றும் பொறிமுறையும் (ளயவையவழைெ ஸலளவநஅ) நிறுவப்படுவது அவசியம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்மொழிவுகளில், யாழ்ப்பாண தீபகற்பகத்தில் நிலத்திடிக்கு சென்று நிலத்தடி நீரை மாசுபடுத்தும் மலக்கழிவுகளைத் தடுக்க, முறையான கழிவகற்றும் பொறிமுறை அமைக்கும் திட்டமும் இருப்பதாக நம்பப்படுகிறது.

வடமாரட்சி நீரேரியும் உப்பாறும் நன்னீரேரிகளாக, நிலத்தடி நீரில் சேரும் மலக் கழிவுகளும் இல்லாமல் போக, யாழ்ப்பாண கிணறுகள் நன்னீரால் நிரம்பி வழியும், விவசாயமும் வளம் பெறும். யாழ்ப்பாண தீபகற்பத்தின் தண்ணீர் பிரச்சினையை தீர்க்க அறுபது ஆண்டுகளிற்கு மேலாக பேசப்பட்டு வரும் இந்தத் திட்டம், முதலாவது வடமாகாண தமிழர் ஆட்சியில் முழுமையடைந்து, விக்னேஸ்வரன் ஆட்சிக் காலத்தின் மணிமகுடமாக திகழும் என்பது நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்பு.

**நீர் வளம் உண்டு, நில வளம் உண்டு, நிம்மதி ஒன்றுதான் இல்லைஇந்த மண் எங்களின் சொந்த மண்**












Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

## Dividend/ Interest Income

### கம்பனி ஈவுத் தொகை வங்கி வட்டி வருமானம்

**அறிமுகம்**

சிலவகையான வருமானங்களான சம்பளம், சுயதொழில் செய்பவரின் வருமானம் என்பனவற்றிற்கு வரியும் *(tax)*, *national insurance* ம் (தேசிய காப்பீடு) அறவிடப்படுகின்றன. அதே சமயம் *dividend bank interest* வருமானம் போன்றவற்றிற்கு *national insurance* செலுத்தத் தேவை யில்லை.

*Dividend* ஈவுத்தொகை

பல பங்குச் சந்தையில் பங்குகளை வாங்குவதன் மூலம் உதாரணம் *B.P* பங்கு, *Vodaphone* பங்கு வாங்குவதன் மூலம் ஈவுத்தொகை வருமானத்தையும் மற்றும் சிலர் தமது சொந்தமான கம்பனிகளில் இருந்தும் ஈவுத்தொகை வருமானத்தை பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இந்த ஈவுத்தொகை வருமானத்திற்கு வரி மட்டுமே செலுத்த வேண்டும். 6.4.16 முதல் ஈவுத்தொகையில் வரி அறவிடபடும் முறையில் பாரிய மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

*2017 / 2018* ம் ஆண்டில் முதல் £5000 வரையான ஈவுத்தொகை வருமானத் திற்கு *"dividend allowance"* என்ற அடிப்படையில் எந்தவிதமான வரியும் செலுத்தத் தேவையில்லை. *2018 / 2019* ம் ஆண்டு முதல் இந்த சலுகை *£2000* ஆக குறைக்கப்படவுள்ளது.

| | Old Rates | New Rates |
|---|---|---|
| Basic rate tax payers | 0 % | 7.5 % |
| Gigher rate tax payers | 25 % | 32.5 % |
| Additional rate tax payers | 30.6 % | 38.1 % |

**உதாரணம்:**

சிவம் என்பவரின் வருடாந்த வருமானம் £150,000. இவரின் வருடாந்த ஈவுத்தொகை வருமானம் £50.000 முதல் £5000 புதிய *dividend allowance* அடிப்படையில் வரி செலுத்தத் தேவையில்லை. மிகுதி £ 45,000 38.1% ல் வரி அறவிடப்படும்.

இன்னொரு நாட்டில் இருந்து கிடைக்கும் *dividends (foreign dividends)* இதற்கு உதாரணமாக இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் ஒருவர் பல கம்பனிகளில் பங்குச் சந்தை முதலீட்டின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் குறிப்பிடலாம். வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் *dividends* ற்கு *"withholding tax"* என்ற அடிப்படையில் வரி அறவிடப்படுகினறது. அதாவது வெளிநாட்டு கம்பனி ஏற்கனவே வரியைக் கழித்த பின்னரே *(10%* அல்லது *15%) dividend* வருமானத்தை கொடுப்பார்கள் *UK* பல நாடுகளுடன் *"double tax treaty"* இருப்பதால் வெளிநாட்டில் செலுத்தப்படும் வரி என்பது *10%* அல்லது *15%* ஆகக் குறைத்து செலுத்தப்படுகிறது. *US* நாட்டின் *dividend withholding tax 30%* ஆனால் *UK* ற்கும் இடையிலுள்ள *"double tax agreement"* படி *W-8BEN* என்ற பத்திரத்தை பூரணப்படுத்துவதன் மூலம் *withholding tax* ஐ *15%* மாக குறைக்கலாம்.

**வட்டி வருமானம்**

6.4.2016ம் ஆண்டில் இருந்து புதிய *personal saving allowance* என்பது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் நீங்கள் *20% tax* செலுத்துபவராக இருந்தால் முதல் £1000 வரையான வட்டிவருமானத்திற்கும் நீங்கள் *40%* வரி செலுத்துபவராக இருந்தால் முதல் *£500* வரையான வட்டி வருமானத்திற்கும் எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை.


£ 5000 வரையான வட்டி வருமானமும் *0%* வரியும் மிகவும் குறைந்த வருமானத்தில் இருக்கும் பலா் £5000 வரையிலான வட்டி வருமானத்தில் எந்த விதமான வரியும் செலுத்தத் தேவையில்லை. தங்களுடைய *non-savings* வருமானம் அதாவது சம்பளம், வாடகை வருமானம், என்பன *£16500*ற்கு மேலாக இல்லாமல் இருந்தால் நீங்கள் இந்த சலுகையை பெற்றுக் கொள்ளலாம்.

***FTSE 100***

*FTSE* 100 என்பது *UK* ல் இருக்கும் 100 பெரிய கம்பனிகளின் மொத்தமான நிலைமையை குறிக்கின்றது. இந்த 100 கம்பனிகளின் முதல் பெரிய 10 கம்பனிகளை கீழ்வருமாறு தரப்படுத்தலாம்.

| | CAPITAL £M |
|---|---|
| 1- Royal Shell | 175,962 |
| 2- HSBC | 135,333 |
| 3- BRITISH AMER. TOBACCO | 104,237 |
| 4- BP | 93,381 |
| 5- GLAXO | 80,818 |
| 6- ASTRA ZENECA | 66,155 |
| 7- VODAFONE | 61,286 |
| 8- DIAGEO | 58,829 |
| 9- UNILEVER | 55,274 |
| 10- RECKIT | 55,121 |

இந்த 10 கம்பனிகளும் மொத்த *FTSE 100* கம்பனிகளின் *weighting* ல் 43 வீதத்தை பெற்றுக் கொள்கின்றன. *FTSE* 100 வரைபடம் இங்கே:




இங்கே இருக்கும் வரைபடத்தின் படி *FTSE* 100 20 வருட கால அதி உயர்ந்த பெறுமதியான 7000 என்ற நிலையை கடந்த வருடம் மீறி இருந்ததை அனைவரும் அறிவீர்கள். தற்பொழுது உள்ள நிலையின் படி இதன் விலையானது வரைபடத்தில் உள்ள நீலநிற கோடான 6900 புள்ளிகளுக்கு கீழே குறைவாக செல்லாவிட்டால் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் கடந்த பல ஆண்டு நடைமுறைகளை பார்க்கும் பொழுது *SEPTEMBER* மாதம் வரை பங்குச் சந்தையில் வீழ்ச்சிகள் காணப்பட்டு வந்ததால் *FTSE 100* இன் பெறுமதியானது கீழே விழுந்து செல்லும் சாத்தியக் கூறுகள் தான் அதிகமாக தென்படுகின்றன.

***How to Pay less than 5% Tax on your income of £45000 Salary/ Dividend Combination***

*06/04/17* முதல் ஒவ்வொரு மாதமும் £680 சம்பளம் எடுத்தால் எந்தவிதமான வரியும் செலுத்தத் தேவையில்லை. அதே போல் முதல் £5000 வரையான *dividend* வருமானத்திற்கும் எந்தவிதமான வரியும் இல்லை.

| | |
|---|---|
| *£ 680 x* 12 மாதங்கள் | *£8,160* |
| *Personal allowance* (மிகுதி) | *£3,340* |
| *Dividend* (முதல்; *£5000* வரி இல்லை) | *£5000* |
| முதல் *£ 16500* ற்கு எந்த வரியும் இல்லை. | £16,500 |
| *Dividend* | £28,500 |
| | *= £45,000* |

5000 ற்கு மேல் கிடைக்கும் *dividend* வருமானத்திற்கு *7.5%* வரி மட்டுமே செலுத்தவேண்டும். எனவே *7.5% x £28,500 = £2,138*

வருமானம் *£45.000*


Lakshmi
Jewellery & Silks
பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் மிக மிக மலிவு விலையில் கிடைக்கும்
அழகிய டிசைன்களில்
தரமான
தங்க நகைகளுக்கு
எம்மை நாடுங்கள்
தொலைபேசி: Ruban 0179 72 35 729
Tel:0521 4283 510
Wilhelm Str.09
33602 Bielefeld

Kaneen Electronics
புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை பொருத்த சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள்
புதிய சட்டத்திற்கமைய வியாபார ஸ்தாபனங்களுக்கு சட்டபூர Barcode Kasse பொருத்துவதற்கும், சகல Smart TV, Alarm, Überwachung Kamera, Sat-Tv, IP-TV, Internet, கருவிகளை பொருத்துவதற்கும், சகல மங்கள நிகழ்வுகளையும் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் Lyca IP-TV Box ஐபெற்றுக்கொள்வதற்கும்.
www.kaneenelectronics.de
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

# குதிக்கால் எலும்புத் துருத்தல்




Dr. IN

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

மூஞ்சையில் இடிக்காதவாறு நீட்டினார் 'எக்ஸ்ரே'யை "பாருங்கோ வடிவா! குதிக்காலிலை எலும்பு வளர்ந்திருக்காம். என்ன செய்யிறது? வெட்ட வேணுமே" மூச்சு விட நேரமில்லாமடட பேசினார்.

அவரது குதிக்கால் எலும்பின் கீழ்ப்புறமாக பிசிறுபோல எலும்பு சற்று வளர்ந்திருந்தமை தெரிந்தது. குதிக்காலில் வலி என ஒரு மருத்துவரிடம் காட்டியபோது அவர் மருந்து மாத்திரைகள் கொடுத்து தசைப் பயிற்சிகளையும் சொல்லிக் கொடுத்துள்ளார். பேச்சோடு பேச்சாக குதிக்கால் எலும்பிலும் சிறுவளர்ச்சி என்று சொன்னதால் வந்த வினை.
எக்ஸ்ரேயுடன் மருத்துவர் மருத்துவராக ஓடித் திரிகிறார். குதிக்காலின் பிரதான எலும்பு கல்கேனியம் எனப்படுகிறது. உடல் எடையைப் பெருமளவு தாங்கும் எலும்பு என்பதுடன் பாதத்தின் முக்கிய தசை நாரான குதிக்கால் சவ்வு (plantarfascia) இதனுடன் இணைந்துள்ளது.

இந்தச் சவ்வு மிகவும் பலமுள்ளதாக இறுக்கமானதாகவும் இருக்கிறது. இச் சவ்வுதான் பாதத்தின் அடிப் பகுதியில் உள்ள வளைவைப் பேண உதவுகிறது. அத்துடன் நடக்கும்போதும் ஓடும்போதும் உடலின் எடையானது பாதத்தில் சமச்சீராக தாங்கப்படுவதற்கும் உதவுகிறது.
இந்த கல்கேனியம் என்ற எலும்பின் கீழ்ப்புறத்தில் கல்சியம் படிவதையே (C) குதிக்கால் எலும்புத் துருத்தல் என்பார்கள். அந்த எலும்பின் முற்புறமாக அரைஅங்குல நீளம்வரை நீண்டு அது வளர்வதுண்டு. குதிக்கால் வலியென நோயாளிகள் சொல்லும்போது மருத்துவர்கள் எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்க்கும்போது இது தெரியவரும். ˊஇருந்தபோதும் வேறு காரணங்களுக்காக எக்ஸ்ரே எடுக்கும்போதுதான் பெரும்பாலும் இந்த எலும்பு வளர்ச்சி இருப்பது தெரியவருகிறது.
இது ஆபத்தான நோயல்ல. குதிக்கால் எலும்புத் துருத்தலால் அறிகுறிகள் எதுவும் பொதுவாக ஏற்படுவதில்லை. இருந்தபோதும் அவர்களுக்கு குதிக்காலில் இருக்கக் கூடும். நடத்தல் ஓடதல்,துள்ளல், நடை போன்ற வற்றின்போது வலி தெரியவரலாம். இருந்தாலும் வலி ஏற்படுவதற்குக் காரணம் குதி எலும்புத் துருத்தல் அல்ல. அருகில் உள்ள குதிக்கால் சவ்வு தசைநாரில் அழற்சி ஏற்படுவதே வலிக்குக் காரணமாக பெரும்பாலும்
இருப்பதுண்டு.
குாலையில் எழுந்து காலடி வைக்க ஆரம்பிக்கும்போது . குதிக்காலில் சுளீரெனக்குத்துவதுபோல வலிக்கும். அதேபோல சற்று நேரம் ஓய்வாக உட் கார்ந்திருந்துவிட்டு நடக்க ஆரம்பிக்கும்போது அதே விதமாகக் குத்துவது போன்ற வலி ஏற்படும். ஆனால் இதே விதமான அறிகுறிகள் குதிக்கால் சவ்வு அழற்சியின் (Planterfascitis) போதும் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



காலையில் எழுந்திருக்கும்போது குதிக்கால் சவ்வு மிகவும் இறுக்கமாக இருப்பதால் சிறிய அசைவுகள்கூட வேதனையை ஏற்படுத்துகின்றன. ஆயினும் சற்று நடந்த பின்னர் அதன் இறுக்கத்தில் சற்று தளர்ச்சி ஏற்பட ஆரம் பிப்பதால் வேதனை சற்றுக் குறையும்.
இதனால்தான் காலை எழுந்து நடமாட முன்னர் பாதத்தை தங்கள் கைகளால் மசாஜ்செய்யும்படி குதிக்கால் வலி உள்ளவர்களுக்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்குவர்.

குதிக்கால் சவ்வு அழற்சி மற்றும் குதிக்கால் எலும்புத் துருத்தல் அறிகுறிகள் ஒரேவிதமாக இருப்பதால் பலரும் ஒன்றை ஒன்று குழப்பிக் கொள்வதுண்டு. இருந்தபோதும் குதிக்கால்சவ்வு அழற்சி உள்ளவர்களிடட 70 சதவிகிதமானவர்களுக்கு குதிக்கால் எலும்புத் துருத்தல் இருப்பதைத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. அதே நேரம் பாதத்தில் எந்த வலிகளும் இல்லாதவர்களில் 70 சத விகிதமானவர்களுக்கு குதிக்கால் எலும்பு துருத்தி இருப்பதும் உண்டு.
குதிக்கால் எலும்புத் துருத்தல் ஏன் ஏற்படுகிறது என்பது தெளிவாகத் தெரியாது. இதுதிடீரெனத் தோன்றுவதில்லை. படிப்படியாகவே வளர்கிறது. பாதத்தில் உள்ளதசைகளுக்கும் சவ்வுகளுக்கும் வினைப்பளு (Strain) அதிகமாதலால் அவை நீளவாக்கில் இழுபடுகின்றன. இதனால் அவை எலும்பில் பற்றியிருக்கும் மெல்லிய சவ்வுகளில் நுண்ணிய கிழிவுகள் ஏற்படுகிறது. இவற்றின் தொடர்ச்சியாகவே அவ்விடங்களில் எலும்பு துருத்தி வளர்கிறது என நம்பப்படுகிறது.



கடுமையாக ஓடுவது துள்ளுவது போன்ற பயிற்சிகளைச் செய்யும் விளையாட்டு வீரர்களில் இதன் காரணமாகவே
அதிகளவில் குதி எலும்பு துருத்தல் பிரச்சனை காணப்படுகிறது. குதி எலும்பு துருத்தி யாரில் அதிகம் ஏற்படுகிறது ஏற்கனவே குறிப்பிட்டது போன்ற கடுமையான உடற் பயிற்சிகள் செய்பவர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு.
நடையின் இயல்பில் பாதிப்பு உள்ளவர்களுக்கும் அவ்வாறே ஏற்பட வாய்ப்புண்டு. நடையின் இயல்பு என்றால் என்ன? **தொடர்ச்சி 10ம் பக்கம்**

**மொழிபெயர்ப்புச் சேவை!**
**V.Ramakrishnan**
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
**A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst**
**Für alle weltsprachen**
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



**T.T.S.Brothers GmbH&Co.KG**
உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

# குதிக்கால் எலும்புத் துருத்தல்



**பொருத்தமற்ற காலணிகள் மற்றொருமுக்கிய காரணமாகும்.**



பொதுவாக நாம் நடக்கும்போது இரண்டு பாதங்களிலும் உடற் பாரமானது ஒரே விதமாக விழுமாறு நடக்கிறோம். ஒரு கால் சற்றுக் குட்டையாக அல்லது பாதத்தில் வளைவுகள் சீரற்றோ இருந்தால் ஒரு பாதத்தில் அதிக தாக்கம் ஏற்படும். இது எலும்பு துருத்தலுக்கு காரணமாகலாம்.
அதேபோல ஒரு பக்க முழங்காலில், பாதத்தில், அல்லது தொடையில் வலியிருந்தாலும் நாம் எம்மையறியாது பாரத்தை மற்றக் காலில் அதிகம் பொறுக்கவைப்போம். இதுவும் காரணமாகலாம். கடுமையான தரைகளில் ஓடுவது துள்ளல் நடைபோடுவது போன்றவையும்காரணமாகலாம். பொருத்தமற்ற காலணிகள் மற்றொருமுக்கிய காரணமாகும். தேய்ந்த காலணிகளும் அவ்வாறு எலும்புத்துருத்தலுக்கு வழிவகுக்கலாம்.

உடல் எடை அதிகமான குண்டு மனிதர்களுக்கும் வாய்ப்பு அதிகமாகும். வயது முதிரும்போது குதிக்கால் சவ்வினது நெகிழ்வுத்தன்மை குறைந்து போகிறது. அத்துடன் பாதத்திற்குப் பாதுகாப்பைத் தரும் கொழுப்பின் அளவு குறைந்து போவதும் காரணமாகலாம்.
நீரிழிவு நோயுள்ளவர்களின் பாதத்தின் நரம்புகளும் தசைகளும் பவீனமடைவதாலும் ஏற்பட வாய்ப்புண்டு. சிலரது பாதங்கள் பிறப்பிலேயே தட்டையாக இருப்பதுண்டு. மாறாக வேறு சிலருக்கு பாதத்தின் வளைவு அதீதமாக இருப்பதுண்டு. இவர்களுக்கும் குதிக்கால் எலும்புத் துருத்தல் ஏற்படக்கூடும்.

சிகிச்சை

குதிக்கால் சவ்வு அழற்சி மற்றும் குதிக்கால் எலும்பு துருத்தல் இரண்டும் வேறு வேறான நோய்களாக இருந்தபோதும் அவை ஏற்படுவதற்கான காரணங்களும் அவற்றின் அறிகுறிகளும் ஒரே விதமானவைதான் எனவே சிகிச்சையும் ஒரே மாதிரியானதுதான்.

## 10 வது ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் கந்தையாபிள்ளை கார்த்திகேசு**
தோற்றம் 28.02.57- மறைவு 12.07.2007

நயினாதீவினைப் பிறப்பிடமாகவும்
யேர்மனியை வதிவிடமாகவும் கொண்டு
வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அமரர்
கந்தையாபிள்ளை காத்திகேசு அவர்களின்
பத்தாவது ஆண்டு **நினைவு அஞ்சலி.**

எத்தனை ஆண்டுகள் போனாலும்
நம் நெஞ்சினில் ஏற்றிவைத்த அன்பெனும் தீபம்
என்றுமே அணையாது

**அமரர் கந்தையாபிள்ளை கார்த்திகேசு**
Germany/Schwerte.

மனைவி, மக்கள் மருமகன்மார்
பேரப்பிள்ளைகள்.











# அவள் வருவாளா?

(குரு அரவிந்தன்)

அவள் வருவாள் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது. தொடக்கத்தில் இருந்தே எங்களுக்குள் சின்னச் சின்ன ஊடல்கள் இருந்தாலும் அதை நாங்கள் பெரிது படுத்தவில்லை. அன்று நான் அப்படி நடந்திருக்கக் கூடாதுதான். என்ன செய்வது ஆத்திரத்தில் எழுந்த முன்கோபம் என்னை அப்படிச் செய்ய வைத்து விட்டது. ஒன்றுமே இல்லாத விடையத்திற்கெல்லாம் கொஞ்ச நாட்களாகவே நாங்கள் முரண்டு பட்டுக் கொண்டிருந்தோம். ஒரு நாளுமே யாருக்கும் நான் கைநீட்டியதில்லை. ஒரு விநாடி தாமதித்திருந்தால்கூட அதைத் தவிர்த்திருக்கலாம். கைநீட்டக் கூடிய மாதிரி அன்று அவள் எனக்குள் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தாள். ஆத்திரத்தில் அடித்து விட்டேன் என்று உணர்ந்தபோது 'சொறி' சொன்னேன். அவள் அதைக் கேட்பதாக இல்லை. இரவு முழுதும் அழுது கொண்டிருந்தாள். 'அடிச்சுப் போட்டு சொறியா சொல்லுகிறாய்?' என்பது போன்ற பார்வையிலே என்னைச் சுட்டெரித்தாள்.

நாலு சுவருக்குள் நடப்பதை, குறிப்பாக கணவன் மனைவிக்குள் நடப்பதை வெளியே சொல்லக்கூடாது என்பார்கள். இதைத்தான் ஆண்டாண்டு காலமாய் எம்மவர்கள் கடைப்பிடித்தும் வந்தார்கள். ஆனால் இவளோ மறு நிமிடமே தனது சினேகிதியிடம் சொல்லிவிட்டாள். அவசரப்பட்டு விட்டாள் என்று தான் முதலில் நினைத்தேன், ஆனால் அதுவே எங்கள் வாழ்க்கைக்குக் குழி தோண்டிவிடும் என்ற எதிர்பார்க்கவில்லை. இலவச தொலைபேசி எவ்வளவு சேதம் விளைவிக்கும் என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டேன். அவள் வாயிலிருந்து வெளியேறிய வார்த்தைகள் அடுத்தகணமே பொதுச் சொத்தாகிவிட்டது. 'மனுசியை அடிச்சிட்டானாம்' பொறுக்கி எடுத்தவர்கள் முதுக்குப் பின்னால் நிறையவே பேசிக் கொண்டார்கள். குறிப்பாக இவ்வளவு காலமும் எங்கே இருந்தார்கள் என்றுகூடத் தெரியாத உறவினர்கள் சிலர் எங்களைப் பிரித்து வைப்தற்கென்றே காத்திருந்தவர்கள் போல மிகவேகமாகச் செயற்பட்டுக் கதை பரப்பினார்கள்.

வீட்டிலே என்ன நடக்கிறது என்று நான் ஆசுவாசப் படுத்த முன்பே எல்லாம் நடந்து விட்டது. அவரைப்போய்ச் சந்தி, இவரைப்போய் சந்தி என்று ஆளுக்காள் அவளுக்குச் செல்பேசியிலும், ரெக்ஸ் செய்தியிலும் புத்திமதி சொன்னதில், அவள் பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு தனது சினேகிதியோடு இருப்பேன் என்று இறுமாப்போடு சொல்லிக் கொண்டு போய்விட்டாள்.

அவளைத் தேடிப் போன இடத்தில் அவளது சினேகிதியே உறைக்கும் படியாய் எனக்குப் பதில் சொல்லி அனுப்பி விட்டாள். உழைப்பதால் கையில் காசு வருகிறது, யாருக்கும் அவள் அடிமையாக இருக்க விரும்பவில்லையாம். மனைவியின் மனநிலையை அறிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவளது சினேகிதி சொன்னதில் இருந்து அவள் என்னோடு பேசவிரும்பவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். என்னதான் வீறாப்பு பேசினாலும் கொஞ்சக் காலம்தான் அவளால் அங்கே தங்க முடிந்தது. யார்தான் ஒரு கர்பிணிப் பெண்ணை வைத்துப் பாதுகாக்க முன்வருவார்கள். மறுபடியும் அவள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிறந்த வீட்டிற்கே செல்ல வேண்டி வந்தது. நாட்கள் மாதங்களாய் ஓடி மறைந்தாலும், எனக்குள் குற்ற உணர்ச்சி அப்படியே இருந்தது. அவர்களாகச் சொல்லாவிட்டாலும் பெண் குழந்தை ஒன்று பிறந்ததாக உறவினர் சொல்லிக் கேள்விப்பட்டேன். ஒரு தந்தைக்குரிய மகிழ்ச்சியைக்கூடப் பறிகொடுத்த நிலையில் அன்று நானிருந்தேன்.

குடும்ப வாழ்க்கையென்றால் அடிமை வாழ்க்கை என்ற எண்ணத்தை யாரோ அவள் மனதில் விதைத்திருந்தார்கள். ஏன் எங்களைப் பிரிப்பதற்குக் காரணமான அவளது சினேகிதியே அதைச் சொல்லிக் கொடுத்திருக்கலாம். எனக்குப் புத்திமதி சொன்னவர்களும் நல்லதை எடுத்துச் சொல்லவில்லை.

'ஒரு பொம்பிளைக்கு இவ்வளவு திமிர் எண்டால் நீ ஏன் அடங்கிப் போகவேணும்? நீ பேசாமல் இரு, இவையெல்லாம் பட்டுத் தெளிய வேணும்' சந்தர்ப்பம் பார்த்து உறவுகள் என்னை உசுப்பிவிட்டார்கள்.

அவள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியேறியபோது எனக்குள்ளும் அந்த வீம்பு இருந்ததனால்தான் நானும் மௌனமாக இருந்தேன். சந்தர்ப்பம் சூழ்நிலை எங்களைச் சிந்திக்க வைக்கவில்லை. மூன்றாம் மனிதரின் தலையீட்டின் ஆளுமை இருவர் மனதிலும் பதிந்திருந்திருக்கலாம். அவ்வப்போது சாம்பல் பூத்துக்கிடக்கும் நெருப்பை ஊதிப் பெருப்பிப்பதுபோல எங்கள் வாழ்க்கையிலும் விதி புகுந்து விளையாடி இருக்கலாம்.

புரிந்துணர்வு இருந்திருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது என்று புத்திமதி சொல்லிச் சென்றவர்கள் ஒரு பக்கமும், எவ்வளவு தூரத்திற்கு இப்படி விட்டுக் கொடுப்பது என்று தன்மானப்பிரச்சனையைப் பெரிது படுத்திவிட்டுச் சென்றவர்கள் மறுபக்கமும் இருந்து செயற்பட்டாலும் அவர்களின் நோக்கம் ஒன்றாகத்தான் இருந்தது. இப்படியே இந்தக் குழப்பத்திற்கு நடுவே அகப்பட்டு துடுப்பிழந்த படகாய் நாங்கள் இருவரும் தத்தளித்துக் கொண்டிருந்தோம். இலவசமாக எல்லோரும் ஆலோசனை சொல்லலாம். ஆனால் அதன் வலியும் வேதனையும் அதை உண்மையில் அனுபவிப்பவர்களுக்குத்தானே தெரியும்.

உண்மையைப் புரிந்து கொண்ட நல்ல நண்பர்கள் எங்களை ஒன்றாய்ச் சேர்த்து விடவேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்கள்.

'ஒரே ஒரு வார்த்தை செல்லிவிடு, அதற்கும் அவள் கேட்காவிட்டால் திரும்பி வந்துவிடு.' என்று அன்புக் கட்டளையிட்டார்கள். நானும் அதற்கு உடன் பட்டுச் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன்.

பனி நிறைந்த குளிர் காலத்தில் ஒருநாள்,

அவள் குழந்தையை தள்ளு வண்டியில் வைத்து தள்ளிச் சென்றாள். அவளது இந்தத் துயரத்தில், துன்பத்தில் எனக்கும் பங்கு இருக்கிறது என்ற உணர்வு என்னை வதைத்தது. அவள் பிடிவாதக்காரியாக இருக்கலாம், ஆனால் எனக்கு நல்ல மனைவியாய் இருந்திருக்கிறாள்.

அவளை எதிரே சந்தித்தபோது ஒரு கணம் தயங்கி நின்றேன். அவளும் விலகிப் போகாமல் எதிரே நின்றாள். யாரே அந்நியரைச் சந்தித்தது போன்ற உணர்வோடு இருவரும் நின்றோம். 'ஐயாம் சொறி' என்றேன் தயக்கத்தோடு.

'ஏன் மன்னிச்சுடு என்று சொல்ல மாட்டீங்களோ, பெரிய மானஸ்தன்' அவளது வளமையான துடுக்கான வார்த்தைகள் என்னைக் குத்திக் கிழித்தன. ஆனாலும் பொறுமையாய் நின்றேன்.

'அதுதான் மன்னிச்சிடு என்று சொன்னேனே.' 'செய்யிறதைச் செய்து போட்டு இப்ப வந்து மன்னிப்புக் கேட்டால் எல்லாம் முடிஞ்சிடுமோ?' இயலாமையில் அவளது கண்கள் கலங்கின. என்னிடம் பதில் சொல்ல வார்த்தை இல்லை. எனவே மௌனம் காப்பது நல்லதென நினைத்தேன்.

'நான் இவளை வைச்சுக் கொண்டு படுகிற கஸ்டம் உங்களுக்குத் தெரியேல்லையே?' 'தெரியும் அதுதான் தேடி வந்தனான்.'

'எல்லாருக்கும் நான் வேண்டாதவளாய்ப் போய்விட்டேன். எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்.' தலையிலே அடித்து அவள் மெல்லச் சிணுங்கினாள். வீதியால் போனசிலர் திரும்பிப் பார்த்தார்கள்.

'ரோட்டில வேண்டாம் எங்கேயாவது போய்க் கதைப்போமே' என்றேன்.

நான் குழந்தை வண்டிலைத் தள்ளிக் கொண்டு செல்ல அவள் அருகே நடந்து வந்தாள். உடம்பெல்லாம் மூடிக்கட்டியிருக்கக் குழந்தையின் முகம்மட்டும் தெரிந்தது. சின்ன வயதில் எடுத்த என்னுடைய புகைப்படத்தைப் பார்ப்பது போல இருந்தது. அதில் லயித்துப் போயிருந்த என்னை எதிரே வந்த அவளது சினேகிதியின் குரல் நிமிர்ந்து பார்க்க வைத்தது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...



## அவள் வருவாளா?

11ம் பக்கத் தொடர்ச்சி...

'என்னடி எவ்வளவு கஷ்டப்பட்டு உனக்கு செப்பிரேசன் வாங்கித் தந்தனான். ஒரு நிமிடத்தில் எல்லாத்தையும் உடைச் செறிஞ்சிட்டியே.' அவமானத்தில் ஏற்பட்ட கோபத்தால் சினேகிதியின் முகம் சிவந்து போயிருந்தது. இருவரும் சற்றுத் தள்ளி நின்று பேசினாலும், அவர்கள் பேசுவது எனக்கும் கேட்டது.

'அந்த நேரம் எனக்கு அப்படித்தான் இருந்தது. இப்ப கடந்தகால வாழ்க்கை அனுபவம் என்னை யோசிக்க வைச்சிருக்கு' 'அப்ப திரும்பி இவனோட போகப்போறியே?' 'வேறை என்ன செய்யிறது?'

'நீ அப்ப யோசிச்சிருக்க வேணும், உனக்காக எத்தனை நாள் நான் வேலைக்கு லீவு போட்டிட்டு நிண்டனான் தெரியுமே?'

'தெரியும். நான் மறக்கேல்லை, இப்ப இவளைக் கையில வைச்சுக் கொண்டு நான் என்ன செய்ய?' 'ஏன் இவ்வளவு நாளும் இவனே உன்னைத் தூக்கிப்பிடிச்சவன்?' 'தனிய என்னால ஏலாது' 'ஓ.. எனக்கு விளங்குது. உனக்கு இப்ப என்ன தேவைப்படுகுது எண்டு.. பனிக்காலமெண்டால் குளிருக்கை தனிய இருக்கிறது கொஞ்சம் கஷ்டம் தான், சூடு தேவைப்படுகுதாக்கும்' அவள் வார்த்தைகளை நீட்டி முழங்கிய போது, அவள் எங்கே அடிக்கிறாள் என்று தெரிந்தபோது, இவள் குறுகிப் போனாள்.

'அப்படி ஒண்டுமில்லை, என்னால தனிய இவளை வளர்க்க ஏலாது'

'அப்ப இவனோடதான் வாழப்போறியே?' 'வேற என்ன செய்ய? வீட்டிலையும் அதைத்தான் சொல்லுகினம்" 'இவனெல்லாம் ஒரு ஆம்பிளையே, உன்னைக் கைநீட்டி அடிச்சவன்ரி'

'இல்லை, ஆத்திரத்தில நான்தான் முதல்ல அவரை அடிச்சனான்'

'என்னடி சொல்லுறாய்?' சினேகிதியின் முகம் பேயறைந்தது போல மாறியது.

'அவர் மானஸ்தன். அதுதான் நான் அடிச்சதை வெளியாலை சொல்லேல்லை.'

'இனியும் உனக்கு அடிக்கமாட்டான் எண்டு என்ன நிச்சயம்?'

'அவர் அடிச்சதுக்குக் காரணம் நானும்தான், அவரைச் சீண்டி விட்டனான். மற்றும்படி அவராக ஒருநாளும் கைநீட்டவில்லை, நம்பிக்கைதான் வாழ்க்கை எண்டு காலம் தாழ்த்தி எண்டாலும் புரிஞ்சு கொண்டன்.'

'அப்ப நீ இவனோடதான் வாழ்றது எண்டு முடிவெடுத்திட்டாய்?' இவள் எதுவும் பேசாமல் நின்றாள். இவளது மௌனம் அவளைச் சினம் கொள்ள வைத்தது.

'என்னவோ செய், இனிமேல் என்னைத்தேடி மட்டும் வீட்டை வரவேண்டாம்'

'சொறிடி, உனக்குக் கஸ்டத்தை தந்திட்டன்'

'இப்பிடித்தான் ரமணியும் சொல்லிப் போட்டுப் போனவள். உங்களைப் பிரிச்சுவிடுறதுக்கு மட்டும் எங்கட உதவி தேவை, எங்களிட்டைச் சொல்லாமலே நீங்கள் ஒன்றாய் சேர்ந்திடுவீங்கள். கெதியாய் திரும்பி வருவியள் என்னட்டை உதவி கேட்டு, அப்ப பாப்பம்.'

இவள் சொல்ல வந்ததைக்கூடக் கேட்காமல், அவளது சினேகிதி சாபம் போட்டு விட்டு விரைந்தாள்.

அவள் முன்னால் செல்ல, நான் குழந்தை வண்டிலைத் தள்ளிக் கொண்டு மௌனமாகப் பின் தொடர்ந்தேன். அவளது சினேகிதி சொன்ன வார்த்தைகள் எனக்குள் குமைந்து கொண்டிருந்தன. இப்படியும் விரக்தியோடு சில பெண்கள் இந்த மண்ணில் இருக்கிறார்கள் என்று எனக்குள் சமாதானப் படுத்திக் கொண்டேன். அவளது தொடர்மாடிக் கட்டிடத்தை அடைந்ததும் அவள் குழந்தை வண்டிலை என்னிடம் இருந்து வாங்கிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள். 'பாய்' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போய்விடுவாள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன்.

'உள்ளே வாங்களேன்' தயக்கத்தோடு கேட்டாள்.

'தாங்கள், தங்கட குடும்பம் எண்டு அவை கவனமாய் இருந்து கொண்டு மற்றவையை பிரிச்சுவிடுறதிலேயே இவை கவனமாய் இருக்கினம்' உள்ளே நுழையும்போது அவள் முணுமுணுத்தது அப்படியே அவள் மனநிலையை எடுத்துக் காட்டியது. காலம் தாழ்த்தினாலும் உண்மை நிலையை இப்போதாவது புரிந்து கொண்டிருக்கிறாளே என்பதில் மனம் சாந்தி அடைந்தது.

'இருந்து ரீவி பாருங்கோ கோப்பி போட்டுக் கொண்டு வாறன்' தொலைக் காட்சியை இயங்க வைத்தாள். யாரோ கேட்ட நேயர்விருப்பம் போய்க்கொண்டிருந்தது. விண்ணைத் தாண்டி வருவாயாவில் திரிஷா திரையில் ஏக்கத்தோடு அசைந்து கொண்டிருந்தாள்.

'ஒருநாள் சிரித்தேன் மறுநாள் வெறுத்தேன்
உனைநான் கொல்லாமல் கொன்று புதைத்தேனே
மன்னிப்பாயா.. மன்னிப்பாயா.. எனை மன்னிப்பாயா..?'

மெல்ல விழி உயர்த்தி அவளைப் பார்த்தேன், அவளும் என்னைப் பார்த்தபடியே நின்றாள்.

அவளது கலங்கிய கண்களைப் பார்த்ததும் எனது கண்களும் கலங்கிப் பார்வையை மறைத்தன. ஆனாலும் இருவரின் உதடுகளும் ஒரே சமயத்தில் அந்தப் பாடல் வரிகளைத்தான் முணுமுணுத்தன.

மன்னிப்பாயா.. மன்னிப்பாயா..!

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்.யோ்மன்.பிரஞ்.துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயம்
Sri Navasakthi Vinayagar hinduistische Gemeinde Jüchen e.v







Hoch str.10b -Hochneukirch, 41363 Juchen Germany
Tel:02164 70 20 944

நூதன ஆலய அஷ்டபந்தன பஞ்சகுண்டயாக பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்
[30.06.2017 வெள்ளிக்கிழமை]

விநாயகர் அடியார்களே! யோ்மன் திருநாட்டின் யூச்சன் பதியில் புதிதாக ஆகமவிதிக்கமைய சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் ஆலயம் அமைக்கப்பெற்று ஸ்ரீ நவசக்தி விநாயகர் எழுந்தருளி அருள்பாலிப்பதற்கு ஸ்ரீ நவசக்தி விநாயகர் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுள்ளோம். நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் 16ம் நாள் (30.06.2017 வெள்ளிக்கிழமை) சுபகாலை 10.05 மணிமுதல் 12.10 மணி வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ நவசக்தி விநாயகர்,சிவன் பார்வதி, ஸ்ரீ லக்மிநாராயணன், ஸ்ரீ வள்ளிதேவசேனாசமேத சுப்பிரமணியர், ஸ்தம்பவிநாயகர் மூஷிகம்,பலிபீடம், கொடிக்கம்பம், கோஷ்ட மூர்த்திகள், ஸ்ரீ ஐயப்பன், ஆஞ்சநேயர், நவக்கிரகநாயகர்கள், உற்சவமூர்த்திகள், வைரவர் சண்டேஸ்வரர் மூர்த்திகளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இச்சுபமூர்த்தத்தில் பக்தர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து தரிசித்து ஸ்ரீ நவசக்தி விநாயகர் பெருமான் பேரருள்பெற்று பெருவாழ்வு வாழவேண்டுகிறோம்.

பிரதிஷ்ட்டா பிரதமகுரு :சிவாகமகிரியாபூஷணம் சிவசிறி தியாக.சோமாஸ்கந்தசிவாச்சாரியர்.
(ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம் Roermond,Nederland)
ஆலய பிரதம குரு: சிவகாமபாலவன் சிவசிறி ச.பாலபாஸ்கரக்குரக்கள்

சர்வசாதகாச்சார்யர்
சிவசிறி.மகாதேவ ஸ்ரீவத்சாங்ககுருக்கள் (காயத்திரியபீடம் தர்மஸாஸ்தாகுருகுலம், இணுவில்மேற்கு.)கிரியாஞானஜோதி சிவசிறி கணேச சாமிநாதக்குருக்கள்
கிரியாகுருமணி: சிவசிறி இ.சுபசபாநாதக்குருக்கள்
சிவார்ச்சனாதிலகம்: சிவசிறி.இ.குமாரகணேஷராஜக்குருக்கள்
கிரியாகலாமணி: சிவசிறி சிவவசந்தகுமாரக்குரக்கள்.

இங்ஙனம் : ஆலய தர்மபரிபாலனசபை
தகவல்: மென்வெதும்பகம் வரதன்

எண்ணெய்க்காப்பு சாத்தல்
28.06.2017 புதன்கிழமை பகல் 13.00 மணிமுதல் மாலை 20.00 மணி வரையும் 29.06.2017 வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 14.00 மணிவரையும் அடியவர்கள் தங்கள் கரங்களால் எண்ணெக்காப்புசாத்தலாம்

# யாத்திரைப் பத்து

கவிஞர் வி.கந்தவனம்




மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாத யாத்திரைச் சங்கத்தின் கதிர்காம யாத்திரை

எமது சமயத்திலே இருக்கும் பலவகையான வழிபாட்டு முறைகளிலே ஆலயங்களுக்கு யாத்திரை செய்து வழிபடும் முறையும் ஒன்று. யாத்திரை என்ற சொல் திருத்தலங்களை நோக்கிய பயணத்துக்கே பயன்படுத்தப் பட்டுவருகின்றது. அதனால் இப்பயணம் திருத்தல யாத்திரை என்றும் வழங்கப்படும். ஆங்கிலத்தில் இது pilgrimage எனப்படுகின்றது. ஆனாலும் சில குறிப்பிட்ட கோயிற் பயணங்களுக்கே யாத்திரை என்ற சொல் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருவதையும் கவனித்தல் வேண்டும். சான்றாக, எமது தாயகத்தில் கதிர்காம யாத்திரையையும் பாரதத்தில் காசி யாத்திரையையும் சொல்லாம். இதிலிருந்து மிக நீண்ட ஆலயப் பயணங்களுக்கே யாத்திரை என்ற சொல் உரித்தாக்கப்பட்டிருப்பது தெரிகிறது. .

தாயகத்திலே பல யாத்திரைகளை முன்னின்று நடத்தியவர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள். அவர் ஏழாலையிலிருந்து நல்லூருக்கு அடியாருடன் நடந்து செல்வதையும் யாத்திரை என்றுதான் அழைத்தார். ஆலயங்களுக்கு இக்காலத்திலே வாகனங்களிலே போய்வரும் வழக்கம் பெருகியதால் குறுகிய கால்நடைத் தலப்பயணத்தைப் பாத யாத்திரை என்று அழைக்கும் வழக்கமும் வரலாயிற்று.

நாயன்மார் காலத்திலே மாட்டுவண்டிகள், குதிரை வண்டிகள் இருந்த போதிலும் பெரிதும் பாதயாத்திரைகள் செய்தே மக்கள் இறைவனை வழிபட்டனர். மக்களுக்கு அந்த முறையைக் காட்டிக் கொடுத்தவர் சமயகுரவர். அவர்கள் நடந்து சென்றே ஆலயங்களில் சிவபெருமானைத் தரிசித்தனர்; பாடல்களைப் பாடினர்; பத்திநெறியை வளர்த்தனர்; சைவத்தை நிலை நாட்டினர். குழந்தையாகிய திருஞானசம்பந்தர் நடந்து வருந்துவதைக் கண்ட இறைவர் அவருக்குப் பல்லக்கு வழங்கியருளினார்.

யாத்திரை வழிபாட்டுக்கு முதன்மை அளிக்கும் வகையில் மணிவாசகப் பெருமான் யாத்திரைப் பத்து என்ற பெயரிலே பதிகம் ஒன்றைப் பாடியியிருக்கின்றார். திருவாசகத்திலே அது 45ஆவது பதிகமாக இடம்பெற்றிருக்கின்றது.

யாத்திரைப் பத்திலே இறைவனைச் சென்றடையத் தன்னுடன் வருமாறு அடியவரை அழைக்கின்றார் மணிவாசகப் பெருமான். அப்படி ஒரு அழைப்பினைத் திருவெம்பாவையிலும் செய்கின்றார். அதிற் பக்குவம் பெற்ற பெண்களைக்கொண்டு செய்விக்கின்றார். இங்கு தாமாக அழைக்கின்றார். அப்படி அழைக்கின்ற பொழுது தமது அதீத அனுபவங்களையும் எடுத்துச்சொல்லி அழைப்பதையும் கவனிக்க முடிகிறது. உதாரணமாக முதற் பாட்டிலேயே,

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணையினால்ஆவா
என்னப் பட்டன்பாய் ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே

என்று தமது அனுபவங்களைச் சொல்லாமற் சொல்லி அழைப்பதைப் பார்க்கமுடிகிறது. அவர் அன்பால் இறைவனுக்கு ஏற்கனவே ஆட்டபட்டவர். போவோம் ... பொய்விட்டு என்ற தொடரில் முன்னர் திருச்சதகத்தில் வரும் மெய்தான் அரும்பி விதிர்விதித்து என்ற பாடலில் அவர் சொன்ன பொய்தான் தவிர்த்த அனுபவம் பேசப்படுகின்றது.
தான் என்னென்ன தகைமைகளால் ஆட்பட்டாரோ அவற்றை மற்றைய அடியவர்களும் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லி அழைக்கின்றார்.
எந்த ஒரு முயற்சியை மேற்கொள்ளுவதற்கும் அதற்குரிய தகைமை வேண்டும். ஒரு பரீட்சையை எழுதுவதற்கு வினாக்களுக்கு விடைகளை எழுதக்கூடியு தகைமை வேண்டும். அத் தகுதியை முன்னதாகவே பாடங்களை நன்கு படித்துப் பெற்றிருத்தல் வேண்டும். அடுப்படி வேலைக்கேனும் அடிப்படைத் தகைமை வேண்டும். அதுபோல இறைவனை அடைவதற்கும் சில தகைமைகள் வேண்டும். அவற்றையெல்லாம் சொல்லி அழைக்கின்றார். இந்தத் தகைமைகளிலே ஒன்று வெகுளியை விடுதல். வெகுளி ஆணவத்தின் அடையாளம். ஆணவம் ஒரு கொடிய மலம். மலத்துடன் இறைவனை அடைய முடியாது என்பதனை உணர்த்த விடுமின் வெகுளி வேட்கை நோய் என்கிறார்.

திருமூல நாயனாரும் வெல்லும் அளவும் விடுமின் வெகுளியை என்கிறார். முடிந்த அளவுக்குச் சினத்தைக் கைவிடுங்கள் என்பது இதன் பொருள். இதிலிருந்து வெகுளியை அடக்குவது கடினமான காரியம் என்பது தெரிகிறது. அடுத்த பாடலில்,

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூ றடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே

என்று அழைக்கின்றார். 'பாம்புகளை ஆபரணங்களாக அணிந்தவராகிய சிவபெருமானின் திருவடிகளையே உள்ளதில் இருத்தி அவற்றைப் போற்றுங்கள்! மலர்களை வைத்து வணங்குங்கள்! துன்பங்களைப் பொருட்படுத்தாதீர்! இனிமேல் எவ்வித இன்னல்களும் வந்தடையாவகை செல்வச் சிறப்புமிக்கச் சிவபுரத்துக்குச் செல்வோம், வாருங்கள்! அங்கு சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நாம் திருவருள் விளங்கிநிற்கும் அடியார்முன் சென்று உள்ளம் உருகி நிற்போம்!' என்பது இதன் பொருள்.
சிவன் அன்பே வடிவானவன். அவனை அன்பினால் அடைதல் மிக எளிது. அன்பு உள்ளவரின் செயற்பாடுகளையே இந்தப் பாடல் வலியுறுத்துகின்றது.

இவ்வித அழைப்பைக் கேட்டுப் பலபேர் அவர் பின்னாற் சென்றிருக்க வேண்டும். ஆனாலும் சேர்ந்தவர் தொகை வாதவூரருக்கு மனநிறைவைத் தரவில்லை. அதன் விளைவாக இந்தக் குரலை எழுப்புகின்றார்:

நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனி புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியான் பெம்மானே.

நில்லா உலகம் வாழ்க்கை நிலையாமையை உணர்த்து கின்றது. பேழ்கணித்தல் - காலம் தாழ்த்துல். இத்தொடர்களால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும், பருவத்தே பயிர்செய்ய வேண்டும் என்பன போன்ற கால முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பழமொழிகளை நினைவுபடுத்துகின்றார் மணிவாசகர். அதாவது, இறைவனை அடைவதற்கு இதுவே தருணம், தக்க சமயம். அதனால் காலத்தைத் தாழ்த்தாமல் புறப்படுங்கள் என்கின்றார். இதனையே 5ஆவது பாடலில் மிகவே காலம் இனியில்லை என்றும் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம்.
தில்லைக்கு நாளைக்குச் செல்வோம் நாளைக்குச் செல்வோம் என்று காலம் தாழ்த்திய திருநாளைப்போவாரும் தக்க தருணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்பது எமக்குத் தெரியும். அனால் தருணம் வந்து கைகூடிய பின்னரும் பலர் வந்துகூடவில்லை. வராதவருக்காக நாம் இனிக் காத்திருக்கப் போவதில்லை என்ற உறுதிப்பாட்டோடு பெருமான் வந்தவர்களுடன் நடக்கின்றார். ஆனாலும் வராதவர்களை எண்ணி அவரது மனம் இவ்விதம் இரங்குகின்றது:

தொடர்ச்சி 15 ம் பக்கம்


Essen மாநகரில் மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
APIRAAMI ENTERPRISE
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும்


Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925



சிவகாமி மனவறைச் சோடினை
யோகன்,யோகி: 02823/6838
Mobil: 152 138 22 350
Yogan Deko



எமது வியாபார ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு
ஐந்தாண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு
5 YEAR ANNIVERSARY
Asia Samuthiram
ஆசியா சமுத்திரம்
வழங்கும்
எங்கும்! எப்பொழுதும் கண்டிராத
மாபெரும் மலிவு விற்பனை
12.07.2017-22.07.2017
உங்கள் தேவைகளை
எங்கள் சேவையாகக் கொண்டு பணியாற்றிவரும்
எமது வணிக நிறுவனம்
தரமான பொருட்களை மட்டுமே இறக்குமதி செய்து
விநியோகித்து வருவதே ஐந்தாண்டுகளை
வெற்றியுடன் கடந்துள்ளமைக்கு காரணமாகும்.
தொடர்ந்தும் எம் சேவை
உங்கள் ஆதரவோடு தொடர
அன்புடன் இருகரம் கூப்பி
வரவேற்கிறோம்.
வியாபார உலகில்
தனித்துவமானவர்கள் நாம்
என்பதனால்தான்
நுகர்வோர் மனதில்
நிரந்தரமானவர்களாக
இருக்கின்றோம்
email:info@asia-samuthiram.de
facebook:Asia-samuthiram
Asia Samuthiram
Sittard Str.21
41061 Mönchengladbach
Tel.02161 90 28 388
Fax 02161 90 28 399
T.Anpalagan


SOMMER ANGEBOT gültig bis 31.07.2017
AKR Werbetechnik
Designing & Printing
Offset und Digitaldruck
BANNER-DRUCK
75 x 200 cm
2 Stück
€ 69,99
1000 St. VISITENKARTEN
8,5 x 5,5 cm 300g/m² Bilderdruck,
und Selbstfärbestempel 3,8 x 1,4 cm
€ 74,99
5000 St. FLYER
DIN-A5, 135 g/m², 2 seitig
€ 82,50
T-Shirt Druck - POLO
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St.
€ 12,90
10,000 St. PIZZA MENÜ- FLYER
mit 135 g/m², 6 seitig, Bild Glänzend
€ 269,90
ROLL - UP DISPLAY
85 x 200 cm,
mit Kunden wünsch Motiv
€ 69,99
T-Shirt Druck - Basic
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St.
€ 8,90
ab 10 St.
€ 7,90
Küchenschürze mit druck
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St.
€ 12,90
Für IBC Mitglieder 5% Rabatt!
Gold, Platinum, VIP oder VVIP-Karte
IBC தமிழ்
PLATINUM MEMEMBERSHIP
ab € 50,00
5%
Rabatt!
(außer Angebote Artikel)
- Design- Gestaltung wird EXTRA berechnet nach aufwand
- Angebot Arikel Lieferbar in 3-4 Werktage
- Express Lieferung 15 % EXTRA
- Alle Preis sind zzgl. 19 % MwSt.
Ihr Foto auf Leinwand im
XXL Format!
WE PRINT YOUR IDEA
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56 | 44137 Dortmund
akrvisualizers
akrvisualizers

5 YEAR ANNIVERSARY

எமது வியாபார ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு
ஐந்தாண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு

# Asia Samuthiram

# ஆசியா சமுத்திரம்

வழங்கும்

எங்கும்! எப்பொழுதும் கண்டிராத

## மாபெரும் மலிவு விற்பனை

**12.07.2017-22.07.2017**

உங்கள் தேவைகளை
எங்கள் சேவையாகக் கொண்டு பணியாற்றிவரும்
எமது வணிக நிறுவனம்
தரமான பொருட்களை மட்டுமே இறக்குமதி செய்து
விநியோகித்து வருவதே ஐந்தாண்டுகளை
வெற்றியுடன் கடந்துள்ளமைக்கு காரணமாகும்.

தொடர்ந்தும் எம் சேவை
உங்கள் ஆதரவோடு தொடர
அன்புடன் இருகரம் கூப்பி
வரவேற்கிறோம்.



வியாபார உலகில்
தனித்துவமானவர்கள் நாம்
என்பதனால்தான்
நுகர்வோர் மனதில்
நிரந்தரமானவர்களாக
இருக்கின்றோம்

email:info@asia-samuthiram.de
facebook:Asia-samuthiram

Asia Samuthiram
Sittard Str.21
41061 Mönchengladbach

Tel.02161 90 28 388
Fax 02161 90 28 399

*T.Anpalagan*



SOMMER ANGEBOT gültig bis 31.07.2017
AKR Werbetechnik
Designing & Printing
Offset und Digitaldruck
BANNER-DRUCK
75 x 200 cm
2 Stück € 69,99
1000 St. VISITENKARTEN
8,5 x 5,5 cm 300g/m² Bilderdruck,
und Selbstfärbestempel 3,8 x 1,4 cm
€ 74,99
5000 St. FLYER
DIN-A5, 135 g/m², 2 seitig
€ 82,50
T-Shirt Druck - POLO
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St. € 12,90
10,000 St. PIZZA MENÜ- FLYER
mit 135 g/m², 6 seitig, Bild Glänzend
€ 269,90
ROLL - UP DISPLAY
85 x 200 cm,
mit Kunden wünsch Motiv
€ 69,99
T-Shirt Druck - Basic
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St. € 8,90
ab 10 St. € 7,90
Küchenschürze mit druck
100% Baumwolle,
Farben und Größen nach Wahl
ab 5 St. € 12,90
Für IBC Mitglieder 5% Rabatt!
Gold, Platinum, VIP oder VVIP-Karte
IBC தமிழ்
PLATINUM MEMEMBERSHIP
ab € 50,00 5% Rabatt! (außer Angebote Artikel)
- Design- Gestaltung wird EXTRA berechnet nach aufwand
- Angebot Arikel Lieferbar in 3-4 Werktage
- Express Lieferung 15 % EXTRA
- Alle Preis sind zzgl. 19 % MwSt.
Ihr Foto auf Leinwand im XXL Format!
WE PRINT YOUR IDEA
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56 | 44137 Dortmund
akrvisualizers
akrvisualizers


மங்கலகரமான
திறப்பு விழா
Dortmund
நகரில்
28.06.2017 புதன்கிழமை
Samira Travels
உங்கள் விடுமுறையை இதமாகக்கழிக்க
தரமான விமானச் சேவைகள்!
GRAND OPENING
28.06.2017 புதன்கிழமை
உலகின் எப்பாகங்களுக்கும்
தரமன விமானச் சேவைகளை
தெரிவுசெய்து
சிறப்பு விலையில்
தருகிறோம்
உலகின் எப்பாகத்திற்கும்
நிதான விலையில்
Airline Tickets
Design:Vettimaniy
Westerbleich Str.77-
44147 Dortmund
Tel:01741925169

# பலியிடப்படும் மாடுகளின் பிரார்த்தனைகள் பலிக்கிறதா!




மாட்டுக் கொம்பில் வர்ணம் அடிக்கவும் தடை! அடுத்து மாட்டு பொங்கலுக்கும் தடை?! மாடுகளின் கொம்புகளுக்கும் வர்ணம் அடித்தால் இனி சிறைவாசம் என சொல்கிறது இந்திய மத்திய அரசு. இந்த புதிய தடையால் தமிழர்களின் பண்பாட்டு விழாவான மாட்டு பொங்கல் இனி கொண்டாட முடியாத நிலை உருவாகிடும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.
மத்திய அரசு திடீரென மாடுகள் மீது கரிசனம் காட்டுகிறது. மாடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்ய தடை விதித்ததுடன் ஆடு, மாடு பலியிடலுக்கும் தடை விதித்துள்ளது. அத்துடன் மாடுகளின் கொம்பு களுக்கு பெயிண்ட் அடித்தாலும் கூட சிறைவாசம்தானாம்.

**சீனாவில் மாடுகளுக்கு வர்ணம் பூசி வர்ணப்போட்டிகளே வைத்துக் கொண்டாடுகின்றது.**




தமிழர்களின் பண்பாட்டு விழா பொங்கல் பண்டிகைகள்தான். காப்பு கட்டு, பொங்கல் திருநாள், மாட்டு பொங்கல், காணும் பொங்கல் இவைதான் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள்.
உறவுகள் ஒன்று கூடும் இந்த பொங்கல் திருவிழாவின் போதுதான் ஊரே ஒன்று சேரும். உறவினர்கள் ஒன்று சேரும் இந்த நாளில்தான் பல திருமணங்களுக்கான அச்சாரங்கள் அரங்கேறும். மாட்டு பொங்கல் மாட்டு பொங்கல் மாட்டுப் பொங்கல் நாளில் மாடுகளைக் குளிப்பாட்டி கொம்புகளுக்கு வண்ணம் பூசி மாலை அணிவித்து அவற்றையும் தெய்வமாக கருதி பொங்கல் வைத்து வழிபடுவது தமிழர் பண்பாடு. (தெய்வங்களையே தெய்வத்திற்கு பலியிடுவது அப்போ சரியா? ) தமிழர்களின் செல்வமாக போற்றிப் பாதுகாக்கப்படும் மாடுகளை தெய்வங்களில் ஒன்றாக கருதியே இந்த திருவிழாவே நடைபெறுகிறது.
கட்சி கொடி நிறங்கள் கட்சி கொடி நிறங்கள் அதுவும் அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் தங்கள் கட்சி கொடிகளின் நிறத்தை மாடுகளின் கொம்புகளுக்கு பூசி அழகுபார்க்கிற வழக்கம் தமிழகத்தில் இன்றளவும் இருக்கிறது. இதை யொட்டியே ஏறுதழுவுதல் எனப்படும் சல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் மாடுகளை துன்புறுத்துவதாக கூறி சல்லிக்கட்டுக்கு முதலில் தடை விதித்தனர். சல்லிக்கட்டு புரட்சி ஒட்டுமொத்தமாக தமிழகமே கிளர்ந்தெழுந்து சல்லிக்கட்டுப் புரட்சியை நடத்தியது. இதனால் சல்லிக்கட்டு தடைக்கு காரணமான பீட்டா தலைதெறிக்க தப்பி ஓடியது.
கொம்புகளுக்கு வர்ணம் பூச தடை இப்போது, மாடுகள் வெட்ட தடை, விற்பனைக்கு தடை, எருமை மாடுகளை பலியிட தடை... அத்துடன் மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் பூசினாலும் சிறை என எதேச்சதிகாரமான உத்தரவை பிறப்பித்திருக்கிறாரகள். சீனாவில் மாடுகளுக்கு வர்ணம் பூசி வர்ணப்போட்டிகளே வைத்துக் கொண்டாடுகின்றது.
இந்தியாவில் இத்தகைய உத்தரவால் தமிழர்களின் பண்பாட்டு விழாக்களில் ஒன்றான மாட்டு பொங்கல் கொண்டாட முடியாத நிலையை உருவாக்கியுள்ளனர். இது தமிழகத்தை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.




மனிதர்கள் தங்கள் உடலுக்கு வர்ணம் அடிக்கும் கலை இன்று உச்சத்தை தொட்டுள்ளது. கவர்ச்சியாகவோ கலையாகவோ ஆண்கள், பெண்கள், என வேறுபாடு இன்றி "உடல் வர்ணக்கலை" பெரிதாக வளர்ந்துள்ளது. அன்று தொட்டு மிருகங்களுக்கும் வர்ணம் பூசி அழகு பார்ப்பது நம் மரபு. இப்போ மனிதன் கேட்பார்ரற்று மாடாகிறான். மாடுகள் தெய்வமாகிறது. மோடி அரசு சமயசார்பற்ற அரசு.
அதனால் மாடுகளின் விருப்பதற்கு மாறாக அரசியற் சாயம் பூசி தடைவிதிக்கிறதோ!

## யாத்திரைப் பத்து

13ம் பக்க தொடர்ச்சி....

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இதுசெய்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே.

இன்றே வந்தாள் ஆகாதீர் என்பனைக்கொண்டு யாத்திரைப் பத்து ஒரு குறிப்பிட்ட காலகட்டப் பயணத்தை மட்டும் குறிப்பதாக நாம் கொள்ளுதல் பொருந்தாது. சிந்தித்துப் பார்த்தால் எமது வாழ்க்கையே ஒரு யாத்திரைதான் என்பது புலனாகும்.

பசுவின் (ஆன்மாவின்) பதியை நோக்கிய பயணமே பிறப்பும் இறப்பும். இறைவனை அடைந்தால் பிறவிக்கடலை ஆன்மா தாண்டிவிட்டது என்று பொருள். இறைவனை அடைவதற்குரிய நெறிகளை மேற்கொள்வதற்கே இப்பிறப்பு எமக்குத் தரப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்யாதவர் செத்துப் பிறப்பதையே தொழிலாகக் கொண்டவர். அப்பர் பெருமான் பாடுகின்றார்:

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

இதனையே மணிவாசகப் பெருமானும் தன்னுடைய அனுபவமுறையில் யாத்திரைப் பத்திலே சொல்லி எம்மை வழிப்படுத்துகின்றார்.

குரவர் சொல்வழி கேளாதவர் பின்னை மருள்வார், மதிப்பிழப்பார்; மதியுள் கலங்கி மயங்குவார். மீண்டும் மீண்டும் பிறந்து உழல்வார்!

இன்றே வந்தாள் ஆகாதீர் என்ற தொடரிலே வரும் இன்றே என்பதனை இந்தப்பிறவியில் என்று கொண்டு, பெற்ற பிறவியை நன்கு பயன்படுத்தி இறைவனை வணங்கி முத்தி யின்பம் அடைவோமாக!


RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்: 100% Free service
Umfinanzierung / வீட்டுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!

Sinnadurai Kiritharan
Tel:05723 914519
புதிய வாடிக்கையாளர்களுக்கு
100,00€ இருந்து 500,00€ வரை
பெறுமதியான LIDL அல்லது TANK Gutschein
01.04.2017 முதல் 31-12-2017 வரை



Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de
EU-VAT / Umsatzsteuer ID-Nr DE 186406298 -- Berufserlaubnis erteilt am 08.01.2002 Registrierungsnummer D-W-133-ADSJ-30

# தமிழக அரசியலை நிர்ணயிப்பது
# திரையரங்குகளா ?

சேவியர்







தமிழக அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் நான்கு பெரிய ஆளுமைகள் திரைத்துறையிலிருந்து வந்து முதல்வராகியிருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம். அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா எனும் அந்த நான்கு முதல்வர்களும் தமிழகத்தை நீண்டகாலம் ஆட்சி செய்திருக்கின்றனர். அண்ணாவும், கலைஞரும் உரையிலும், எம்.ஜி.ஆர் , ஜெயலலிதா இருவரும் திரையிலும் கோலோச்சியவர்கள்.


அந்த வரலாறு இனிமேல் தொடருமா ? இன்னும் தமிழக அரசியலை திரையரங்குகள் நிர்ணயிக்குமா எனும் கேள்விக்கு பதில் காண வேண்டிய அவசியம் இன்றைக்கு எழுந்திருக்கிறது.



மக்கள் சேவை செய்ய வேண்டும் எனும் உண்மையான வேட்கையோடு வருகின்ற பலரும் அரசியல் களத்தில் காணாமல் போய்விடுகின்றனர். ஆனால் திரை பலத்தோடு வருகின்ற பலரும் அரசியல் களத்தில் தாக்கத்தை உருவாக்கி விடுகின்றனர். இதுவே நாம் இதுவரை கண்ட காட்சிகள். ஆனால் அந்த காட்சி தொடருமா ?

இன்றைய தொழில்நுட்ப உலகம் கொஞ்சம் வித்தியாசமானது. அமெரிக்காவில் நடக்கின்ற ஒரு விஷயம் அமெரிக்கர்களுக்குத் தெரியும் முன் இந்தியர்களுக்குத் தெரிந்து விடுகிறது. ஒரு சினிமாவின் வருகின்ற காட்சி கொரிய படத்திலிருந்து காப்பியடிக்கப்பட்டது என்பதை படம் வெளியான சில மணி நேரங்களிலேயே சமூக வலைத்தளங்கள் சுட்டிக் காட்டி விடுகின்றன.

ஒத்த கருத்துருவாக்கம் ஒன்றை உருவாக்குதல் இன்றைக்கு எளிமையான விஷயம் அல்ல. உடனுக்குடன் அந்த செய்தியை மறுத்தோ, எதிர்த்தோ கருத்துகள் டிஜிடல் வடிவில் பரவி விடுகின்றன.



ஒரு ஆளுமையை சர்வ வல்லமை பொருந்தியவராக சித்தரிப்பதும், கழுவி வைத்த கடவுளாய் அவரை எல்லோரும் கொண்டாடுவதும் இன்றைக்கு சாத்தியமே இல்லை.

ஒரு சின்ன உதாரணமாக, ஜல்லிக்கட்டு போராட்டத்தைச் சொல்லலாம். அது இளைஞர்களின் எழுச்சியின் ஒரு அடையாளம்.

ஜல்லிக்கட்டுக்கு காலம் காலமாக ஆதரவு நிலைப்பாடு உள்ள அரசியல் தலைவர்களைக் கூட இளைஞர்கள் தங்கள் வசம் சேர்த்துக் கொள்ளவில்லை. நடிகர், நடிகையர் விஷயத்திலும் அதுவே நடந்தது. தாமாகவே போய் தங்கள் பெயரை பிரபலப்படுத்திக் கொள்ள முயன்ற நடிகர்களின் சாயமும் பல இடங்களில் வெளுத்துப் போன பரிதாபத்தைப் பார்க்க முடிந்தது.

## "இந்தா புடிய்யா கத்தி"



ஒரு கதை சொல்வார்கள். ஒரு முறை சினிமாவில் எம்.ஜி.ஆரின் கையிலிருந்த கத்தியை நம்பியார் தனது வாளால் தட்டிக் கீழே போட்டதும் கூட்டத்திலிருந்த ஒருவர் "இந்தா புடிய்யா கத்தி" என தன்னுடைய அரிவாளைத் தூக்கிப் போட்டாராம். அந்த காலம் மலையேறிவிட்டது. மக்களுக்கு திரைக்கும், தரைக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்திருக்கிறது.

ரஜினியின் அரசியல் பிரவேசம் அதோ, இதோ என காலம் காலமாக பரபரப்புடன் உலவிக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு அரசியல் பிரவேசம் நடக்குமா ? அப்படி நடந்தாலும் ரஜினி நினைக்கும் ஒரு நிலை உருவாகுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியே !

ரஜினி தமிழகத்துக்காக என்ன செய்தார் ? தமிழக மக்களின் நலனுக்காக என்ன குரல் கொடுத்தார் ? அல்லது இந்தியாவின் இன்றைய பரிதாப நிலைக்கு என்ன குரல் கொடுத்தார் ? என அடுக்கடுக்கான கேள்விகளை ஆர்வலர்கள் எழுப்புகின்றனர். என்னைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட கேள்விள் கூட தேவையில்லை.

தொடர்ச்சி 17 ம் பக்கம்





16 ம் பக்க தொடர்ச்சி....

# தமிழக அரசியலை நிர்ணயிப்பது திரையரங்குகளா ?





ரஜினி தன்னைச் சுற்றிய விஷயங்களை எப்படிக் கையாண்டார் ? தனது குடும்பத்தில் எழுந்த சிக்கல்களை எப்படித் தீர்த்து வைத்தார் ? திரையுலகில் தனது திரைப்படங்களுக்கு நேர்ந்த சிக்கல்களை எப்படி முடித்து வைத்தார் ? என்பதைப் பற்றி ஆராய்ந்தாலே அவர் சிறந்த தலைவரா, நிர்வாகியா என்பதைச் சொல்ல முடியும்.

ரஜினி ஒரு முறை குரல் கொடுத்த போது ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. இன்னொரு முறை குரல் கொடுத்த போது அதற்கு எதிரான முடிவு வந்தது. இவை சுட்டிக் காட்டுவது ஒரே ஒரு விஷயம் தான். ரஜினியின் குரல் ஒரு அரசியல் மாற்றத்தை உருவாக்கக் கூடியது அல்ல, ஆனால் ஒரு சலசலப்பை, ஒரு பரபரப்பை உருவாக்க வல்லவது அவ்வளவு தான். ரஜினி எப்போதுமே கழுவும் மீனில் நழுவும் மீனாக இருந்திருக்கிறாரே தவிர, சமூகப் பங்காளனாக தன்னை முன்னிறுத்திக் கொண்டதேயில்லை.






திரையுலகின் உச்ச நட்சத்திரமான ரஜினியின் நிலமையே இது எனில், அவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் இன்னொரு நடிகர் அரசியலில் அதிகாரத்தைப் பிடிப்பதெல்லாம் சாத்தியமில்லாத விஷயங்கள். மக்களுக்கு பரிச்சயமான முகம், மக்களுக்கு செய்திகளைக் கொண்டு சேர்க்க முடிகின்ற ஊடகம் என்பதைத் தாண்டி திரை ஆளுமைகள் தமிழகத் திரையுலகின் இனிமேல் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதே உண்மை.

அது ரஜினிகாந்தாக இருந்தாலும் சரி, கமலஹாசனாக இருந்தாலும் சரி, விஜய், அஜித், சூர்யா போன்ற நடிகர்களாக இருந்தாலும் சரி. இதுவே யதார்த்தம். இவர்கள் ஒரு தலைவருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து அவருடைய வாக்கு வங்கியை கொஞ்சம் அதிகரிக்கச் செய்ய முடியுமே தவிர, அரசியலில் புயலாய் புகுந்து இருக்கையில் அமர்வதெல்லாம் பாகுபலி போன்ற மிகைக்கதைகளே.

இன்னும் சொல்லப் போனால் அந்த காலம் எம்.ஜி.ஆருடன் முடிந்து விட்டது. ஜெயலலிதா நடிகை எனும் காரணத்தால் இருக்கையைப் பிடிக்கவில்லை. எம்.ஜி.ஆர் கை காட்டிய நபர் என்பதாலேயே இருக்கையைப் பிடித்தவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். திரையில் உச்சமாய் இருந்தால் அரசியலில் உச்சம் தொட முடியும் எனும் மாயை சிவாஜி கணேசன் காலத்திலேயே உடைந்து விட்டது.




மக்களுக்கு நன்மை செய்து, நல்ல பெயர் எடுத்து, சினிமாவில் ஏழைகளுக்காகவே குரல் கொடுத்து ஒரு களம் உருவாக்கி அரசியலில் புகுந்தவர் விஜயகாந்த். அவருடைய நிலமை இன்றைக்கு எல்லோருக்குமே தெரியும். அரசியல் என்பது ரீடேக் எடுக்கும் இடமல்ல, இங்கே பயன்படுத்தப்படுபவை அட்டைக் கத்திகளல்ல என்பதை அரசியல் அவருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

எஸ்.எஸ்.ஆர், டி.ராஜேந்தர், பாக்யராஜ், கார்த்திக், சரத்குமார் என வெள்ளித்திரை மாயையை நம்பி களத்தில் குதித்து படுகாயமடைந்த பட்டியல் நீள்கிறது. தமிழக அரசியலை சினிமா நிர்ணயிக்கவில்லை என்பதை நிரூபிக்க வேண்டுமானால் ரஜினியும் இந்தப் பட்டியலில் இணையக் கூடும்.

தமிழக அரசியல் ஒரு வெற்றிடத்தில் உலவுகிறது என்பது நிஜம். அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழக மக்கள் ஒரு சினிமா கலைஞரை அல்ல ஒரு நல்ல தலைவரையே எதிர்பார்க்கின்றனர்.

ஓட்டுப் பெட்டியில் தில்லு முல்லு செய்யாவிட்டால், வலுக்கட்டாயமான எந்த மீறல்களும் இல்லாவிட்டால் அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார் என்பதிலும் சந்தேகமில்லை.





சுருக்கமாக, தமிழக அரசியலை நிர்ணயிப்பவை திரையரங்குகள் என்பது மாயையே. அரசியல் மாற்றங்களை திரை ஆளுமைகள் செய்ய முடியாது. அரசியல் சலசலப்புகளை மட்டுமே உருவாக்க முடியும்.







ADCHAYA INTERNATIONAL
ANJAARA
வழங்கும்...
ஹம் ஸ்ரீ காமாட்சி அம்மன் தேர்த்திருவிழா ( 25.06.2017 ) சலுகையாக...நீங்கள் வாங்கும் பொருட்களுக்கு...
15,000 €
பெறுமதியான நிச்சய பரிசுகள்...!
100% QUALITY
100 - ரைஸ் குக்கர்கள் FREE!
FREE! 100 - ரொட்டி மேக்கர்கள்
100 - ஜூஸர்கள் FREE!
FREE! 100 - TWO IN ONE புட்டு குக்கர்
100 - PREMIER புட்டு மேக்கர்கள் FREE!
FREE! 100 - MOKSH அகர் பத்திகள்
(இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே !)
50 EURO-விற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொள்வனவிற்கும் 1-MOKSH அகர்பத்தி BOX FREE.!
100 EURO-விற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொள்வனவிற்கும் 1-JUICER அல்லது PREMIER புட்டுமேக்கர் FREE.!
200 EURO-விற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொள்வனவிற்கும் 1-RICE COOKER அல்லது 1-ROTI MAKER அல்லது 1- TWO IN ONE புட்டு குக்கர் FREE.!
இன்றே உங்கள் இலவச பரிசுகளைப்பெற முந்துங்கள்...!
FOR ADVANCE BOOKING CONTACT :
Online shopping @
www.anjaara.com
ADCHAYA INTERNATIONAL
0231-13091030


உங்கள் திருநாளுக்கு தொலை தூரத்தில் நாங்கள் இல்லை! இன்றும் என்றும் உங்களோடு நாங்கள்!!!
Thushi -Deko
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram
நீங்கள் காணும் அலங்கார மணவறைகள்
யாவும் கனவல்ல நிஜயங்களே!
எம் கையிருப்பில்
அத்தனையும் நிஜயங்களும்!
Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.
Thiruselvam




தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**டோட்முண்ட் சிவன்கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 24.06.2017 | Kiefer Str 24 |
| தேர்த்திருவிழா | 02.07.2017 | 44225 Dortmund |
| தீர்த்தத்திருவிழா | 03.07.2017 | 0231 72 51 51 65 |

**சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கோடியேற்றம் | 22.07.2017 | Robert koch Str 5a |
| தேர்த்திருவிழா | 30.07.2017 | 58239 Schwerte. |
| தீர்த்தத்திருவிழா | 31.07.2017 | 02304 167 21 |

**கையில் புறோன் கந்தசாமி கோயில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 20.05.2017 | Siemens Str 11 |
| தேர்த்திருவிழா | 28.05.2017 | 74177 Bad Friedrichshall |
| தீர்த்தத் திருவிழா | 29.05.2017 | 071 31 205 93 43 |

**எசன் முருகன்கோவில்**

| | | |
|---|---|---|
| திருவிழா ஆரம்பம் | 01.07.2017 | Kloster Str 49 a, |
| தேர்த்திருவிழா | 09.07.2017 | 45139 Essan |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 0201 80 67 433. |

**கொமஸ்பாக் குறிஞ்சிக் குமரன் முருகன்கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 01.07.2017 | Industrie Str 7 |
| தேர்த்திருவிழா | 09.07.2017 | 51643 Gummersbach |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 02261 501 5964 |

**கிறிவீல்ட் நாகபுசணி அம்பாள் கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 01.07.2017 | Girmesgath 85, |
| தேர்த்திருவிழா | 09:07.2017 | 47803 Krefeld. |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 02151 565 00 45 |

**ஹம் திருநல்லூர் ஆறுமுகவேல்அழகன் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 15.07.2017 | Room Str 2a |
| தேர்த்திருவிழா | 23.07.2017 | 59065 Hamm |
| தீர்த்தத்திருவிழா | 24.07.2017 | 02381 29103 |

வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 12ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்

# இங்கிலந்து நாடாளுமன்ற தேர்தலில் 200 பெண் எம்பிக்கள் வெற்றி!



08.06.2017 நடந்து முடிந்த பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் 200 பெண் எம்பிக்கள் வெற்றி. ஆளும் கன்சர்வேடிவ் கட்சி உள்பட எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்கவில்லை. கூட்டணி ஆட்சிதான் அமையும் சூழ்நிலை உருவாகியுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு 200 பெண் எம்பிக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பிரிட்டன் நாடாளுமன்றத்தின் 650 தொகுதிகளுக்கான தேர்தல் ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. இந்தத் தேர்தலில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆளும் கன்சர்வேடிவ் கட்சி 315 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 261இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. ஆட்சி அமைக்க 326 இடங்களில் வெற்றி பெற்று இருக்க வேண்டும் என்ற நிலையில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி போதிய இடங்களில் வெற்றி பெறாதது பிரதமர் தெராசா மேவிற்கு சிக்கலை உருவாக்கியுள்ளது.வலுவான எதிர்கட்சி வலுவான எதிர்கட்சி கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது கன்சர்வேடிவ் கட்சி இந்த முறை 12 இடங்களை இழந்துள்ளது. தொழிலாளர் கட்சி 31 இடங்களை அதிகம் கைப்பற்றியுள்ளது.

**200 பெண் வேட்பாளர்கள் வெற்றி**

உலக தேர்தல் வரலாற்றில் சரித்தரம் படைத்தது இங்கிலாந்து. இந்த முறை 650 தொகுதிகளில் 200 போட்டியிட்ட பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குள் எம்பிக்களாக நுழைகின்றனர். கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலில் 191 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். கடந்த 1918ல், போட்டியிட்ட மொத்தம் 707 வேட்பாளர்களில் ஒரே ஒரு பெண் வேட்பாளர் (Countess_Markiewicz) மட்டுமே வெற்றி பெற்று நாடாளு மன்றத்திற்குள் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



1918 வெற்றி பெற்ற ஒரே ஒரு பெண்மணி




# சந்திரிக்காவுக்குச் சாப்பாடு வேணும்

கே.எஸ்.சுதாகர்.
அவுஸ்ரேலியா



சமீப காலங்களாக இங்கே ஒரு கூத்து ஒன்று நடைபெறுவதை அவதானித்து வருகின்றேன்.
'சந்திரிக்காவுக்குச் சாப்பாடு வேணும்'
ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒரு பிறந்தநாள் விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே ஒருவர் உணவருந்தி முடிந்ததும், "சந்திரிக்காவுக்குச் சாப்பாடு வேணும். பாவம் அவள், நான் வீட்டை போனதும் என்ரை கையைக் கையையே பாப்பாள்" என்று சொல்லியபடி பிளாஸ்ரிக் பெட்டிகளில் சாப்பாட்டை எடுத்துச் சென்றார்.
அவர் தன்னுடைய மனைவியில் இவ்வளவு பாசமா? இருக்கட்டும். இருப்பினும் மற்றவர்களும் சாப்பிட்டு முடிந்த பின்னர் எடுத்துச் சென்றால் அழகாக இருக்கும் என நினைத்தேன்.



இப்படியே அந்த விளையாட்டு வேறு இடங்களிலும் தொடர்ந்தது. பலரும் இந்த விளையாட்டில் ஈடுபட்டார்கள்.
இன்னொரு வீட்டில்,
"புளூட்டோவுக்குச் சாப்பாடு வேணும். எடுத்துக் கொண்டு போறன்"
சொல்லியபடி ஒருவர் சாப்பாடு கட்டத் தொடங்கினார்.

அவர் என்ன செய்கின்றார் என்பதை அவதானித்தபடி, வீட்டுக்காரரைக் கூப்பிட்டு அவரின் காதிற்குள், "புளூட்டோ எண்டது ஒன்பது கிரகங்களிலை ஒண்டு எண்டுதான் இதுவரை எனக்குத் தெரியும். இந்த புளூட்டோ யார்?" என மெதுவாகக் கேட்டேன்.

அதற்கு அவர், "புளூட்டோ எண்டது அவருடைய நாய்" என்று சொல்லியபடி சிரித்தார்.
அப்போ எல்லாரும் நாய்க்குத்தானா சாப்பாடு எடுத்துக் கொண்டு போகின்றார்கள்.
அப்ப சந்திரிக்கா எண்டதுகூட நாய் தானோ?

அந்த மனிதர், நானும் வீட்டுக்காரரும் கதைத்ததைக் கண்டுவிட்டார். பொதி கட்டி முடிந்ததும் நேரே என்னிடம் வந்தார்.

"ஏன் தம்பி புளூட்டோ எண்ட பேர் சரியில்லையோ?
அதுவும் ஒரு கிரகம்தான் தம்பி. வீட்டுக்குப் போனதும் விருந்துச்சாப்பாட்டு மணத்தை என்னிலை நுகர்ந்து பிடிச்சிடும். பிறகு குடுக்காட்டி என்னைக் குதறிப் போடும்" நகைச்சுவையாகச் சொன்னார்.
"அப்ப உங்கடை வீட்டு நாய், சொதி, அப்பளம், ரசம், சம்பல், பாயாசம், கேக், ஃபுறூற் சலாட் எல்லாம் சாப்பிடுமோ?" நான் கேட்க அசடு வழியச் சிரித்தார்.
அவர் போனபின் வீட்டுக்காரர் சொன்னார்:

"இவர்கள் எல்லாம் நாயைக் காட்டி தங்களுக்குத் தேவையான அடுத்தநாள் சாப்பாட்டை எடுத்துச் செல்கின்றார்கள்."

# குளிர்சாதனப்பெட்டியில் புத்தகங்கள்








சமீபத்தில், மெல்பேர்னில் ஃபிளமிங்ரன் (Flemington) என்னும் இடத்தில் மதியம் உணவருந்தப் போகும்போது, ஒரு அரிய காட்சியை வீதியில் கண்டேன்.
ஒரு குளிர்சாதனப்பெட்டிக்குள் சிலர் கையை நுழைத்து எதையோ நோண்டியபடி இருந்தார்கள். சாவதானமாக என்ன நடக்கின்றது என அருகில் நின்று பார்த்தேன்.

குளிர்சாதனப்பெட்டிக்கு மின் இணைப்பு இருக்கவில்லை. பாவனையற்ற, பழுதாகிப்போன குளிர்சாதனப்பெட்டி அது.
அதற்குள்: சிலர் புத்தகங்களை வைப்பதும்இ சிலர் எடுப்பதுமாக இருந்தார்கள். அது ஒரு குட்டி நூல்நிலையம். பின்னர் அதன் இரண்டு கதவுகளையும் இறுக மூடிவிட்டுப் போனார்கள்.


நான் அதனைத் திறந்து உள்ளே பார்த்தேன். பழையதும் புதியதுமான ஆங்கிலப் புத்தகங்கள் அங்கே இருந்தன. அந்தக் குளிர்சாதனப்பெட்டியில் இருந்து யாரும் புத்தகங்களை எடுத்துப் படிக்கலாம், யாரும் புத்தகங்களை வைக்கலாம். படிப்பதற்கும் கால வரையறை கிடையாது.

நான் நியூசிலாந்தில் இருந்தபோது, வீடுகளின் முன்னால் தாம் வாசித்து முடித்தஇ தமக்குத் தேவையில்லாத புத்தகங்களை வைத்திருப்பதை அவதானித்திருக்கின்றேன். யாரும் அதை எடுத்துச் செல்லலாம். அவுஸ்திரேலியாவிலும் இந்த நடைமுறை இருக்கின்றதா எனத் தெரியவில்லை. அதன் ஒரு நீட்சியாகவே இந்த குளிர்சாதனப்பெட்டி நூல்நிலையத்தை நான் பார்க்கின்றேன்.
வீடுகளின் முன்னால் வைக்கும்போது ஒரு குறிப்பிட்ட சிலரே அதனால் பயன் பெறலாம். இந்த குளிர்சாதனப்பெட்டி நூல்நிலையத்தினால் பலரும் பயனடைய வாய்ப்புண்டு.
இதேபோல் மெல்பேர்ண் சிற்றிக்குள் இன்னும் இப்படி இரண்டு நூல்நிலையங்கள் இருப்பதாக அறிகின்றேன்.

S.J. ASIAN - AFRO STORE





உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப் பயனடையுங்கள்.

**Mannheim**
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de




Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு எம்மை நாடுங்கள்.


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
£/€3 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட இணைப்புச் சந்தா
£/€99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
£/€99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
UK
EUROPE
INCLUDED
TENTKOTTA
EROSNOW
சிவலிங்கா
கடம்பன்
காஷ்மோரா
மாநகரம்
BAJIRAO MASTANI
tanu weds manu returns
SANAM TERI KASAM
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
Download on the App Store
GET IT ON Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
App Store
Roku
AirPlay
chromecast
SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
GERMANY
069 1200 7102
UNITED KINGDOM
0207 132 2727
www.lycatv.tv

கௌசி



# ஆண்கள் என்னும் அற்புதப் படைப்பு

பெண்ணின் பண்புகளைப் பாசத்தை பிரமாண்டமாகக் கண்டு வெளிப்படுத்தி ஆகா ஓகோ என்று புகழ்ந்து கவிதை பாடிக் கட்டுரை வடிக்கும் நண்பர்கள், ஆணின் அற்புதங்களைப் பாசத்தை அந்த அளவிற்கு கண்டு கொள்வதில்லை. மௌனமாக இருந்து மனதுக்குள்ளேயே பூட்டி வைத்து குடும்பத்துக்காகவே தன்னை அர்ப்பணித்து அலட்டிக் கொள்ளாமல் இரவு பகல் பொருட்படுத்தாமல் வாழுகின்ற அற்புதப் படைப்பாகிய மாமனிதர்களை பேசிப் பேசித் தீர்க்கவே நாடி வருகிறது இவ்வரிகள்.

பெண்களின் அழகை வர்ணிக்க ஆயிரம் கவிபாடும் கவிஞர்கள் ஆண்களின் அழகை வர்ணிக்க சிங்கம், புலி என்று காட்டு மிருகங் களையெல்லாம் கவிச்சொற்களாகப் பயன்படுத்துவார்கள். ஏனென்றால், கம்பீரம் என்பது ஆண்தானே. பெண்களின் விழிகளை விரியச்செய்யும் அகன்ற மார்பும் விரிந்த தோளும் காந்தக் கண்களும் ஆண்களுக்கு இயற்கை கொடுத்த கொடை. ஆயிரமாய் சம உரிமை பெண்கள் கேட்டாலும், ஜிம்முக்குப் போய் தசைகளை இறுகச் செய்தாலும் இவ்விடயத்தில் பெண்கள் ஆண்களுக்கு இரண்டாம் பட்சம் என்பது உண்மையே. இதனையே

"ஈடற்ற தோளா, இளந்தோளா கண்ணுறங்கு,
மாவீரரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கேஇ என் செந்தமிழே கண்ணுறங்கு"

என்று தாலாட்டு மூலம் தாய் உறுதியளித்தாள்.

மூத்தபிள்ளை ஆண்பிள்ளைப் பிள்ளை வேண்டும் என்று ஆசைப்படுவார்கள் தாய்மார். அங்கே தொடங்கிவிடுகிறது அந்த ஆண்மகனின் பொறுப்பு. பெற்றவர்களின் சுயநலம் என்னும் தொகுப்பு. இறந்தவுடன் தூக்கிப் போடஇ கொள்ளி வைக்க ஒரு ஆண்பிள்ளைப் பிள்ளை வேண்டும் என்னும் தாயின் சுயநலச் சிந்தனை கருவில் உருவாகும் பையனுக்கு தொடங்கி வைக்கப்படுகிறது. நீண்டகால செயல் திட்டத்துடனேயே வயிற்றினுள் ஒரு பணிப் பெட்டகம் வளர்கிறது. குடும்பப் பொறுப்பைத் தந்தை எடுத்து நடத்திக் கொண்டிருக்கும் போதே "அப்பாக்குப் பிறகு நீ தானே எங்களையெல்லாம் பார்க்க வேண்டும்" என்று சொல்லிச் சொல்லித் தாய் சோறூட்டுகிறாள். சகோதரி சினம் கொள்ளும் போது "பார்த்துப் பேசடி அவன்தான் உனக்குச் சீதனம் தரவேண்டும்" என்று சொல்வதன் மூலம் அவனின் கடமையுணர்வு ஊட்டப்படுகிறது. வளர்ந்துவிட்டால் தாய் தந்தைக்கு ஒரு பாதுகாப்பாக இருக்க வேண்டியது கடமையாகிறது. பெண்ணைத் திருமணம் செய்து அனுப்பிவிட்டால்இ ஆண்பிள்ளை திருமணம் செய்தாலும் செய்யாவிட்டாலும் பெற்றோரைக் கவனிக்கும் பொறுப்பு ஆண்மகனுக்கே கிடைக்கிறது. வீட்டில் மனைவியின் ஏச்சு தாயாரின் முணுமுணுப்பு சகோதரியின் உரிமை அதட்டல், தம்பியின் எதிர்பார்ப்புகள்இ வேலைத்தளத்திலே முதலாளியின் கண்டிப்பு அதனால், மானப்பிரச்சினை

இவ்வாறு அத்தனையும் தாங்கி நிற்கும் சுமைதாங்கியாக ஆண்மகன் சுமக்கும் வலிகளோ ஏராளம்.

சீதனத்தைக் கூட ஆண்மகனா பெறுகின்றான்இ அவன் பெயரில் அவனின் தாய்தானே மகனைப் பேரம் பேசி விற்கின்றாள். அதன் பின் வருகின்ற மருமக்களைக் கூட அடக்கி ஆள நினைப்பது அந்தப் ஆணின் தாயாகத்தானே இருக்கமுடிகிறது.



கௌசி

ஒரு பெண்ணாக இருந்து பெண்ணைப் பழித்துப் பேசுபவள் என்னும் கெட்ட பெயரை நான் பெற்றாலும். ஊமையை விட உண்மையை நேசிப்பவள் என்னும் நற்பெயரே போதுமானது.

மனிதப்பிறப்பிலே ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்று ஆர்ப்பாரிக்கும் பெண் வர்க்கம் தேடிப் பேசிப்பேசி சம உரிமைப் போராட்டத்தை நடத்தி அநுதாபத்தை அள்ளிக் கொள்ளும் வேளையிலே இரவும் பகலும் இரவுவேலை பகல்வேலை என்று 2,3 வேலைகளைப் பார்த்து உறக்கமும் உணவும் துறந்து குடும்பம் சிறக்கத் தன் சுகம் இழக்கும் ஆண்வர்க்கம் சுதந்திரம் கேட்டுப் போராடினால், பெண்கள் நிலை என்ன ஆவது? பாசத்தை மனதுக்குள் பூட்டி வைத்து கண்டிப்பை வேசமாய்க் காட்டும் தந்தைக்கு இணை சொல்ல யார் இருக்கின்றார்கள். ஒரு ஆண் இல்லாமல் இவ்வுலகில் ஒரு உயிர் தோன்ற முடியுமா?

ஒரு ஆணுக்கு அத்தனை சுதந்திரங்களும் இருக்கின்றன. கலாச்சாரங்களோஇ கறைகளோ அவர்களை கட்டிப்போடுவதில்லை. அவர்கள் பெயர் கெட்டுப் போவதில்லை. தாசி வீட்டிற்கு கணவனைச் சுமந்து சென்ற பெண் பற்றிப் பேசிய வரலாற்றுப் பின்னணி எமக்குண்டு. இவ்வாறான சுதந்திரங்கள் இருந்தும் கட்டுப்பாட்டுடன் வாழ்கின்றார்களே! அதுவே ஆணின் பெருமையைத் தூக்கி நிறுத்துகின்றது. இவற்றை மீறுகின்ற ஆண்களும் இருக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆயினும் நல்லவற்றை நாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாவற்றிற்கும் வசதிகள் உண்டு. அவ்வசதிகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இப்படித்தான் வாழவேண்டும் என்று தமது கடமைகளின் பக்கம் தலைசாய்க்கின்ற ஆண்களே உத்தம புருஷர்களாகப் போற்றப் படுகின் றார்கள். சோம்பேறிகளாக குடிக்கு அடிமையாகி பெண்கள் உழைப்பில் உண்டி உறையுள் பெற்று வாழும் ஆண்கள் தரித்திர புருஷர்களாக ஏசப்படு கின்றார்கள்.



சின்னச் சின்ன ஆசைகள் பெண்கள் மனதில் இருக்கும் அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது உங்கள் பணியாகின்றது. கடமை கடமை என்று மனைவியைக் கண்டு கொள்ளாது விடுகின்ற போது மனம் வேதனைப்படு கின்றாள்.

தொடர்ச்சி 22 ம் பக்கம்

GALA EVENTHALLE

DORTMUND நகரில் உங்கள் இல்ல சுப காரியங்கள் சிறப்பாக நடைபெற அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய ஒரே மண்டபம்..!

உங்களுக்காக எம்மிடம்...!

- 800 பேர் வரை அமரக்கூடிய அழகிய மண்டபம்
- மேடை, மேசை அலங்காரம் மற்றும் புதிய ரக மணவறைகள்
- புகைப்பட மற்றும் வீடியோ படப்பிடிப்புக்கள்
- மணப்பெண் அலங்காரம்



தொடர்புகளுக்கு:
Th. Gobinath
Auf dem Brümmer 1 | 44149 Dortmund
0152/53961138 | 0231/53375365 | 0231/13029415 | 0231/10876361



**ஆண்கள் என்னும் அற்புதப் படைப்பு**

21 ம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு தடவை நீ எவ்வளவு அழகாய் இருக்கின்றாய் என்று சொல்லிப்பாருங்கள் (அழகாய் இல்லாவிட்டாலும்) அடங்கிப் போவாள். நேரம் எடுத்து நடந்துவிட்டு வரலாம் என்று அழைத்துச் செல்லுங்கள். அச்சமயம் நல்ல விடயங்களை கடந்த கால சந்தோசங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அந்நியோன்னியம் தோன்றும். அதைவிட்டு நடக்கச்சென்று செல்லும் வழியெல்லாம் பிரச்சினைகளைப் பேசி சண்டையுடன் வீடு திரும்பாதீர்கள்.

உங்கள் மனைவியின் பிறந்ததினம் போன்ற சிறப்பான நாள்களுக்கு பெரிதாக இல்லாவிட்டாலும் ஒரு சின்னப் பூவாவது கொடுத்துப் பாருங்கள். முடிந்தால் ஒரு தடவை கட்டி அணைத்துப் பாருங்கள். முத்தம் கொடுத்துப் பாருங்கள். அவள் உங்கள் மனைவிதானே. அத்தனை உரிமைகளையும் உங்களுக்காக அர்ப்பணிப்பவள் அவள்தானே. உங்கள் ஈகோவை விட்டு அன்பை வெளிப்படையாகக் காட்டுவதால்இ எந்தப் பாதிப்பும் உங்களுக்கு வரப் போவதில்லை. அப்பா அம்மாவில் எவ்வளவு பாசம் வைத்திருக்கின்றார் என்று உங்கள் பிள்ளைகளே பெருமிதப்படுவார்கள். பிள்ளைகளுடன் வீட்டில் இருக்கும் நேரத்தில் சுவாரஷ்யமாகப் பேசிப் பொழுதைக் கழியுங்கள். அப்பா வீட்டில் இருந்தாலேயே வீடு கலகலப்பாக இருக்கும் என்று அவர்கள் வாயால் சொல்லக் கேட்பீர்கள்.

மனைவியைக் கவரக்கூடிய ஆடைகளை அணியுங்கள். உங்களுக்கு மட்டும் பிடித்தால்இ போதாது. உங்கள் தோற்றத்தை கூடவே வாழுகின்ற பிறவிக்குப் பிடிக்க வேண்டாமா?

முடிவுகளை எடுக்கும் போது ஆலோசனை கேட்டுப் பாருங்கள். முடிவில் முடிவுகள் நீங்கள்தான் எடுக்கப் போககின்றீர்கள். ஆனாலும்இ ஆலோசனை கேட்டுப் பாருங்கள். மனைவியைப் போல ஒரு மந்திரி இல்லை என்று உணர்வீர்கள். பெரும்பாலான ஆண்கள்இ உனக்கு ஒன்றும் தெரியாது என்று மனைவியின் வாயைக் கட்டிப் போட்டுவிடுவார்கள்.

உங்களுக்குச் சமைக்கத் தெரியாவிட்டாலும் சமைத்துக் கொடுத்துப் பாருங்கள். உலகமெல்லாம் தொலைபேசி எடுத்து உங்கள் மனைவி புகழ்ந்து தள்ளுவாள்.

முடிவாகப் பெண்கள் ஒன்றும் அடிமைகள் இல்லை. இயல்பாகவே உங்களுக்கு உள்ள அடக்கும் தொனியில் பெண்களை அடக்க நினைக்காதீர்கள். இது எத்தனையோ பெண்களின் குற்றச்சாட்டு. பேசும் வார்த்தைகளைத் திரும்ப உங்களுக்குப் பிரதியீடு செய்து பாருங்கள். அது எப்படி வலிக்கும் என்பதை அப்போதுதான் புரிந்து கொள்வீர்கள். அடக்க நினைக்கும் போதுதான் மீறிச் செல்ல மனம் வரும். அப்போதுதான் கலாசார சீர்கேடு ஆரம்பமாகும். குடும்பம் பிரிவதும் குதூகலிப்பதும் உங்கள் கையிலும் உள்ளது ஆண்மகனே!

பெண்களே! எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து உங்களுக்காக வாழுகின்ற ஆண்கள் தமது பெற்றோர்இ சகோதரர்கள்இ உற்றார்இ உறவினர்கள் அனைவரையும் விட நீங்கள்இ உங்கள் குடும்பம் என்ற வட்டத்திற்குள் வந்துவிடுகின்றார்கள்இ உழைத்துப் போடுகின்றார்கள்இ எதைச் சமைத்துப் பரிமாறினாலும் அதற்கே அடிமையாகிவிடுகின்றார்கள். வகைவகையான ஆடை அலங்காரங்களை ஒவ்வொரு விழாக்களுக்கும் நீங்கள் விரும்புகின்றீர்கள்இ அவர்கள் பணப்பை காலியாகிறதுஇ ஆனால்இ ஆண்கள் அப்படி அணிந்ததுண்டா? அவர்கள் உழைப்பை முதலீடாக ஆக்க வேண்டியது. பெண்கள் கடமை என்றே நினைக்கின்றேன். தாய்நாட்டில் அடுத்த நகரம் பார்த்தறியாத பெண்களை புலம்பெயர்ந்து உலகம் முழுவதும் சென்றுவர வசதி செய்து கொடுக்கின்றார்கள். அவர்கள் நீங்கள்இ உங்கள் பிள்ளைகள் தான் உலகம் என்று எண்ணி வாழுகின்றார்கள். பிள்ளைகள் தந்தையை மதிக்கவில்லை யென்றால், அதற்கான முதற்காரணம் தாய். அவர் அர்ப்பணிப்பை வாழ்நாளில் சொல்லிச் சொல்லி வளர்க்கும் போது பிள்ளைகள் மனதில் ஆழமாக அப்பா நல்ல அப்பா என்று பதிந்துவிடும். எதிர்த்துப் பேசும் பிள்ளையை தடுக்கச் செய்வது அம்மா ஊட்டிய பாச உணர்வே என்பது மிகையான வார்த்தையல்ல.

ஆணும் பெண்ணும் இணைந்த இன்பமான, ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கை ஆயுளின் ஆணிவேர். அதை ஆட்டிப்பார்ப்பது அவரவர் வாழ்க்கை முறையிலேதான் தங்கியிருக்கின்றது.




# இளம் சந்ததியினருக்கு தமிழ் எந்த வழியில் பயன்பாட்டு மொழியாகிறது?

**றஜினா தருமராஜா**



நீங்கள் அனைவரும் தொடர்ந்து வாசிக்கும் முன் யோசியுங்கள், நீங்கள் எந்த நேரத்தில் தமிழ்மொழியில் உரையாடுவீர்கள் என்று.

பெற்றோருடன் மற்றும் வீட்டில் உள்ளவர்களுடன் தமிழ்மொழியில் உரையாடுவோம்.

அனைவருக்கும் பிடித்த தமிழ் திரைப்படங்களைப் பார்க்கும் போது தமிழ் மொழியிலே உரையாடத் தோன்றும்.

எங்களை அறியாமலே தமிழ்மொழியில் அத்திரைப்படத்தைப் பற்றி பேசிக்கொள்வோம். அப்படங்களில் வரும் பாடல்களைப் பாடிக்கொண்டே இருப்போம் அல்லவா. தமிழ்மொழியிலே தான் பாடுவோம்.

தொலைக்காட்சியில் வரும் அனைத்து நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் ரசிக்கவும் தமிழ்மொழி அவசியம். மற்றும் இந்நிகழ்ச்சிகளைப் பற்றி உரையாடும்போது தமிழ்மொழியில் உரையாடுவோம்.

வெளிநாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் கலைகளை மறக்கமுடியுமா? இல்லையல்லவா? பயிலும்போது தமிழ்மொழியில் கற்றுக்கொள்கிறோம். தேர்வுகள் அனைத்தையும் தேன்தமிழான எம்மொழியிலே எழுதி நிறைவு செய்கின்றோம். கற்பிக்கும் ஆசிரியர்களுடன் தமிழில் மாத்திரம் கதைப்போம். முக்கியமாகத் தமிழாலயங்களுக்குச் சென்று தமிழ்மொழியின் சிறப்பை அறிந்து கொள்கின்றோம். அங்கு ஆசிரியர்களுடன் நண்பர்களுடன் தமிழ்மொழியில் பேசுகின்றோம். மற்றும் பாடநூல்கள் இலக்கணநூல்கள் வாசிக்கின்றேரம். போட்டிகளிலும் கலைநிகழ்வுகளிலும் கலந்துகொண்டு தமிழ்மொழியில் சிறப்பிக்கின்றோம்.

ஆலயங்களில் கடவுளை வணங்கச் செல்கிறோம். அங்கும் தமிழில் உரையாட முயலுகிறோம்.

சில தருணங்களில் வாழிடமொழியும் கலந்து வருவதை எங்களால் தடுக்க முடியாது.பூப்புனித நீராட்டுவிழாக்களிலும் திருமண விழாக்களிலும் கதைக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. எங்கு சென்றாலும் எங்கள் தாய் நாட்டிற்க்குச் சென்று அங்குள்ள மக்களுடனும் உறவினர்களுடனும் எம்மொழியில் மாத்திரமே பேசிக்கொண்டோம். முதியவர்களுடன் பேசும் பொழுது அதிகமாகக் கவனித்துக்கொள்வோம். இத்தருணங்களில் நாங்கள் தமிழ்மொழியில் உரையாடுகின்றோம். புலம்பெயர் நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் தமிழ்மொழியை மறக்காமல் உரையாடுகிறோம் என்பதில் மகிழ்ச்சி.

# கனடாவில் பொன்விழாக் கண்ட இலட்சியவேட்கை நாடகம்



கனடாவில் நாடகக்கலைஞர் திரு.க.சிவதாசன் வழங்கிய "தேன்சிந்தும் கலைமாலை"



கடந்த மாதம் 27.05.2017 சனிக்கிழமை கனடாவில் கமலாலயம் நாடகக் கலைஞர் வாடைக்காற்று திரைப்படத் தயாரிப்பாளர் புகழ் அமரர் அ.சிவதாசன் அரங்கில் தேன்சிந்தும் கலைமாலை சிறப்பக நடைபெற்றது. இந்நிகழ்வு குரும்பசிட்டி நலம்புரிசபை ஆதரவில் அமரர் ஆ.சி நடராஜா அவர்களின் நூலககட்டி நிதிக்காக நாடகக்கலைஞர் திரு.க.சிவதாசன் வழங்கிய தேன் சிந்தும் கலைமாலை. கௌரவ விருந்தினர்கள் கவிநாயகர் வி. கந்தவனம், திருமதி தவமணி கந்தவனம், திருமதி. சத்தியபாமா துரைசிங்கம்,குரும்பசிட்டி நலம்புரிசபைத் தலைவர் யோ.திலீபன் அவர்களும் மங்கல விளக்கேற்றி விழாவை சிறப்புற ஆரம்பித்து வைத்தனர்.இவ்விழாவின் சிறப்பம்சமாக இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் சாகத்தியமண்டப் பரிசுபெற்ற எழுத்தாளர் அமரர் மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்டு திரு.க.சிவதாசன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட இலட்சியவேட்கை நாடகம் பொன்விழா ஆண்டிலிலும் பொலிவுடன் அரங்கை மகிழ்வில் ஆழ்த்தியது. நிகழ்ச்சிகைள திரு.கதிர்.துரைசிங்கம்,திருமதி சுஜிதா அஜந்தன் ஆகியோர் சிறப்புறத் தொகுத்து மலர்ந்தனர். இன்று கனடாவில் வசிக்கும் விழா அமைப்பாளர் **திரு.க.சிவதாசன்** தாயத்திலும் (குரும்பசிட்டடி) யேர்மனி யிலும் (Dortmund நகரம்) வாழ்ந்த காலத்தில் பல நடகங்களை சிறப்பாக நெறிப்படுத்தி அரங்கேற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


AMMA's food
Sri Lankan & South Indian Specialities

**சூடச் சூட சுவையுடன்**
**அம்மாவின் சமையலுக்கு**
**ஈடானது எங்கள்**
**உணவுகள்!**

## அம்மா'ஸ் உணவகம்

அமைதியாகவும், ஆனந்தமாகவும், பிரியாணி,
கொத்துறொட்டி, இடியப்பக்கொத்து.
தோசை, இட்லி, மசாலாத்தோசை, பாலப்பம்.
இன்னும் ...நீங்கள் விரும்பியவகை
உணவுகளை உண்டு மகிழ்ந்திட

Amma's Food



**Rheinische str.80 A - 44137 Dortmund Tel:0231 33 89 86 91**

# RAJU CARGO

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | கம்பஹா | மாத்தளை | புத்தளம் |
| வவுனியா | மன்னார் | நீர்கொழும்பு | சிலாபம் |
| கிளிநொச்சி | களுத்துறை | முல்லைத்தீவு | காலி |
| கொழும்பு | கண்டி | மட்டக்களப்பு | மாத்தறை |
| திருகோணமலை | பதுளை | இரத்தினபுரி | பண்டாரவளை |






பொதிகளைப் பெற்றுக்கொள்பவர்களிடமிருந்து எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

நீங்கள் அனுப்பும் பொதிகளைப் பெற சுங்க இலாசாவிற்கு அலையவேண்டியதில்லை.

TV, fridge, washing machine, computer போன்ற மின் உபகரணங்களை அனுப்பிவைப்பதற்கான சுங்கத்தீர்வையைப் பெற நாங்கள் உதவுவோம்.

YOUR DELIVERY GUARANTEED 100%

மேலதிக விபரங்களுக்கு எமது தொலைபேசி இலங்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்

Rajaratnam Raju

+31 645 664 110
info@rajucargo.com
www.rajucargo.com
fb.com/raju.rajaratnam

Raju Cargo | Carboonstraat 87 6412 PB Heerlen Netherlands

# தாயக பெண்களும்
## தள்ளிப்போகும் திருமணவயதும்




அனித்தா செல்வராஜா பூஷன்

இன்றைய உலகில் பெண்கள் பங்கேற்காத துறைகளே இல்லை எனுமளவிற்கு பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். அவ்வாறு இருந்தபோதிலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. எமது நாட்டைப்பொறுத்தவரையில் பெண்களுக்கான பாதுகாப்பு என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. குறிப்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர். இது இவ்வாறிருக்க இன்று தாமதமாக திருமணம் செய்கின்ற, அன்றேல் திருமணம்செய்யாது இருக்கின்ற பெண்களுமே அதிகரித்து வருகின்றனர். இது வெறுமனே ஒரு பெண் மற்றும் அவரது குடும்பம் சார்ந்த பிரச்சினையல்ல.. இது ஓர் சமூகப்பிரச்சினையாகவே அணுகப்பட வேண்டியதாகும். இப்பெண்கள் "முதிர்கன்னிகள்" என்று அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பெண்கள் திருமணமாகாது இருப்பதற்கு சாதி, மதம், சாஸ்திரம் என்பதற்கப்பால் பல்வேறு விதமான காரணிகள் செல்வாக்குச் செலுத்து கின்றன. குறிப்பாக இன்றைய கல்வியறிவு நிலையைப் பொறுத்தவரையில் பெண்கள்அதிகம் கல்வி கற்றவர்களாகவும், பல்வேறுபட்ட உயர்பதவிகளை வகிப்பவர்களாகவும் உள்ளனர். இங்கு மேற்படிப்பு முடிவுறும்வரை அல்லது தொழில் பெற்றுக்கொள்ளும் வரை பெண்களாகவே திருமண எண்ணத்தை தள்ளிவைக்கின்றனர். பின்னர் தமது திருமணத்துக்கான ஆணை தெரிவு செய்வதில் தங்களுடைய கல்வி மற்றும் தொழில் நிலைமைக்கு நிகராகவோ அன்றேல் அதிகமாகவோ இருப்பவரை விரும்புகின்றனர். இதில் பெரும்பாலான பங்கு இப்பெண்களைப் பெற்றவர்களுக்கே உள்ளது. ஏனெனில் பெற்றோர்தான் கூடுதலாக இவ்வகையான மனப்பாங்குடன் மாப்பிள்ளை தேடும்படலத்தை ஆரம்பிக் கின்றனர். குறிப்பாக தமது சமூக, பொருளாதார அந்தஸ்தை பெண்பிள்ளை களின் திருமணத்திலேயே காட்டமுனைவர். குறிப்பாக பொருளாதார பலமுள்ள பெற்றோர் தமது பெண்ணுக்கு வைத்தியர் அன்றேல் பொறியியலாளர்தான் கணவனாக வரவேண்டும் என விரும்புவர்.

இவ்வாறாக தொடங்கிய அவர்களது மாப்பிள்ளை தேடும் படலம் தமது பெண்பிள்ளைக்கு முப்பது வயதாகியும் சரியாக அமையவில்லையெனில் தமது வைத்தியர், பொறியியலாளர் கொள்கையிலிருந்து சற்று விடுபட்டு ஏதாவது ஓர் அரச உத்தியோ கத்தராக இருந்தாலும் சரியென தேடுகின்றனர். அதுவும் சரியாக அமையாது பெண்பிள்ளைக்கு நாற்பது வயதாகின்ற போதுதான் என்ன தொழிலென்றாலும் பரவாயில்லை செய்யலாம் என்ற மனப்பாங்கிற்கு வருகின்றனர்.

பல பிள்ளைகள் உள்ள குடும்பத்திலுள்ள பெண்களின் திருமண வயதும் அக்குடும்பத்திலுள்ள மூத்த பெண்ணின் திருமணத்திலேயே தங்ககியுள்ளது. ஏனெனில் மூத்த பெண்ணின் திருமணமானது தாமதமாகுமாயின் ஏனைய பிள்ளைகளுக்கும் தாமதமாகவே நடைபெறும். அதிகமான பெண்பிள்ளை களைக் கொண்ட குடும்பத்தில் இப்பிரச்சினையைக் காணலாம்.

முக்கியமாக திருமண விடயத்தில் பெண்ணின் அழகு என்பது முதலில் கவனிக்கப்படுகின்றது. இங்கு அழகு சம்பந்தமான உடல்ரீதியாக குறைபாடு காணப்பட்டாலும் திருமணச்சந்தையில் பெண்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இதிலும் குறிப்பாக, வறிய குடும்பத்தைச்சேர்ந்த கல்வியறிவு குறைந்த பெண்களே அதிகம் பாதிப்படைகின்றனர். பெண்கள் செய்கின்ற சில தொழில்கள் கூட அவர்களின் திருமன வயதை தள்ளி வைக்கின்றது. குறிப்பாக தொலைககாட்சி அறிவிப்பாளர்கள், பத்திரிகை நிருபர்கள், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரிவோர் இதிலும் குறிப்பாக தொழில்ரீதியான பயணங்களை அதிகமாக மேற்கொள்பவர்கள் தமது தொழிலிலுள்ள மட்டற்ற ஈடுபாடு மற்றும் அதிகம் சம்பாதித்தல் போன்ற பல்வேறு காரணங்களால் திருமணம் செய்து கொண்டால் இதற்கு தடை ஏற்பட்டுவிடுமோ என்ற எண்ணமும் காரணமாக அமைகின்றது.

கடந்தகால யுத்தத்தின் விளைவுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும். ஏனெனில் யுத்தத்தால் பல ஆண்கள் இறந்தமை, காணாமல் போனமை மற்றும் புலம்பெயர்ந்தமையால், பெண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆண்களின் எண்ணிக்கை சதவீதம் குறைவாக உள்ளமையும் ஓர் காரணமாகும்.

திருமணத்திற்காக புலம்பெயர் நாடுகளுக்குச் செல்வதற்கு சில பெண்கள் விரும்புவதில்லை. இதிலும் குறிப்பாக உயர்கல்விகற்று, உயர்தொழில் புரியும் பெண்கள் அனைத்தையும் உதறித்தள்ளி விட்டு வர தயாராக இருப்பதில்லை. பெண் கல்வியறிவு வளர்ச்சி காரணமாக திருமணம் தொடர்பான முடிவுகளை எல்லா கோணத்திலும் சிந்தித்தே எடுக்கின்றனர்.

அதாவது பொருளாதார ஸ்திரத்தன்மை முக்கியமாகக் கருதுகின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்களை விட வீட்டிலிருக்கும் பெண்கள்தான் திருமணமின்மை காரணமாக மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர் எனக் கூறப்படுகின்றது. ஏனெனில் வேலைக்குச் செல்லும் பெண்களின் புலன்கள் வேலை மற்றும் வெளிச்செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்து இருப்பதால் திருமணம் இன்னும் ஆகவில்லை என்ற எண்ணம் இருந்தாலும், கூடிய மன உளைச்சலுக்கு ஆகமாட்டார்கள்.

எமது தமிழ்ச்சமூகத்தைப் பொறுத்த வரையில் கூடியளவாக பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களே அதிகமாக உள்ளன. ஒரு குடும்பத்தில் பெற்றோர், மற்றும் மூத்த ஆண் சகோதரர்களே ஒரு பெண்ணின் திருமணத்திற்கு பொறுப்பாக உள்ளனர். பெற்றோரின் இறப்பு அன்றேல் ஆண்சகோதரர் இன்மை போன்றனவும் தள்ளிப்போகும் திருமண வயதிற்கு காரணமாகின்றது. ஏனெனில் அக்குடும்பத்தில் முன்னின்று வரன்தேட ஒருவரும் இல்லாத சமயத்தில் பெண்ணின் திருமணம் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

புலம்பெயர் சமூகத்தில்கூட இப்பிரச்சினையைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக புலம்பெயர் சமூகத்தில் உள்ள பெண்களுக்கு தாயகத்திலிருந்து ஆண்களை திருமணத்திற்காக வரவழைப்பது என்பது புலம்பெயர் சமூகத் திலுள்ள ஆண்களுக்கு தாயகத்திலிருந்து பெண்களை வரவழைப்ப தனை விட கடினமானதாகவே உள்ளது. என்னதான் இன்று பெண்கள் கல்வியறிவு வீதம் அதிகரித்து, உயர்தொழில் வகித்தாலும் "சீதனம்"என்பது இன்னமும் திருமணத்தில் செல்வாக்குச் செலுத்திய வண்ணமே உள்ளது.

### இன்றைய சீதன சந்தை நிலவரம்

| | |
|---|---|
| வைத்தியர் | : 80 இலட்சம் – 1 கோடி, வீடு, நகை |
| பொறியியலாளர் | : 80 90 இலட்சம், வீடு, நகை |
| சட்டத்தரணி | : 40 70 இலட்சம், வீடு, நகை |
| ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் | : 20 40 இலட்சம், வீடு, நகை |
| தனியார்துறை | : 15 30 இலட்சம், வீடு, நகை |
| சுயதொழிலாளி | : 8 15 இலட்சம், நகை, வீடு |

மூலம்: சமூகவலைத்தளப்பிரதி

இவ்வாறான அதிகரித்த சீதனத்திற்கு புலம்பெயர் உறவுகளிடமிருந்து கிடைக்கும் பணமும் ஓர் காரணமாகும். இதனைவிட ஒரு வீட்டில் பெண்ணை நிச்சயம் செய்யும்போது அவ்வீட்டிலுள்ள ஒருவர் புலம்பெயர் தேசத்தில் இருந்தாலே சீதனத்தின் எதிர்பார்ப்பு மாப்பிள்ளை வீட்டாரிடம் அதிகமானதாகவே காணப்படுகின்றது. இவ்வாறான காரணங்களால் பெண்கள் தாமதமாக திருமணம் செய்வதால் பின்னர் குழந்தைப்பேறின்மை, கருச் சிதைவு, குறைபாடுடைய குழந்தைப்பேறு போன்ற பல்வகையான உடலியல் ரீதியான பிரச்சினைகளையும், திருமணம் ஆகாமலே தனித்து வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படுமிடத்து உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர்.





KERVEN
GMBH
100% LEGAL
HD/SD
VIJAY
IBC தமிழ்
தமிழ்
Lebara play
IBC தமிழ்
IBC தமிழ்
€15
Rabatt
Free
www.kerven-gmbh.com
KERVEN GMBH
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
KERVEN GMBH
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com



# திருமந்திரமும் வாழ்வியலும் 19

[சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி]

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.





## திருமந்திரம் கூறும் ஆசனங்கள்

யோகம் சித்தி பெறுவதற்கு உடம்பின் அசைவற்ற நிலை தேவை. உடலை அசையாமல் நிலையாக இருத்துவதே இருக்கை அல்லது ஆசனம் எனப்படும். ஆசனம் செய்யாமல் பிராணாயாமம் செய்யக்கூடாது. ஆசனம் என்பது உறுதியாகவும், வசதியாகவும் இருத்தலாகும். யோகம் புரிவதற்கு முன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும், ஆசனத்தைச் செய்யுமுன் செய்யவேண்டிய உடல் இளக்கத்தையும், முறைகளையும், பயன்களையும் திருமந்திரம் கூறுகின்றது. ஆசனங்களில் பல்வேறு ஆசனங்கள் உள்ளன. அவற்றில் எட்டு ஆசனங்களை திருமூலர் முக்கிய ஆசனங்களாகக் கூறுவதுடன் சோர்வை நீக்குகின்ற சுகாசனத்தை தலையாய ஆசனமாகக் கூறுகின்றார். திருமந்திரத்தில் வரும் ஆசனம் பற்றிய பாடல்களைப் பார்ப்போம்.

சுகாசனம் மற்றும் எட்டு ஆசனங்கள் பற்றிக் கூறும் பாடல் 558

“பங்கயம் ஆதி பரந்தபல் ஆதனம்
அங்கு உளவாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்குஇல்லை யாகச் சுவத்திகம் எனமிகத்
தங்க இருப்பத் தலைவனும் ஆமே”

பத்மாசனம் முதலாக ஆசனங்கள் பலவாக உள்ளன. அவற்றுள் எட்டு ஆசனங்கள் முக்கியமானவையாகும். சோர்வு இல்லாமல் சுகாசனத்தில் நீண்ட நேரம் இருக்கத் தலைமைப் பேற்றை அடையலாம். (எட்டு முக்கிய ஆசனங்களாவன 1.பத்மம், 2.பத்திரம், 3.கோமுகம், 4.கேசரி, 5.சௌத்திரம், 6.வீரம், 7.சுகாதனம், 8.சுவத்திகம். சுவத்திகம் என்னும் சுகாசன நிலையாவது: முழந்தாளுக்கும் தொடைக்கும் நடுவே இரண்டு பாதங்களையும் வைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்காரும் நிலை. இது சுகத்தை தரும் ஆசனம் அதனால் சுகாசனம் எனக் கூறப்படுகின்றது.)

பத்மாசனம் (தாமரை இருக்கை) பற்றிக் கூறும் பாடல் எண் 559

“ஒரணை அப்பதம் ஊருவின்மேல் ஏறிட்டு
ஆர வலித்துஅதன் மேல் வைத்து அழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத் தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனம்என லாகுமே”

ஒரு பக்கம் அணைந்த காலை மடித்துத் தொடையின் மேலே வைத்து, நன்றாக இழுத்து, இன்னொரு காலை அதன் மேல் வைத்து, அதாவது வலது பக்கத் தொடையின் மேல் இடது காலையும், இடது பக்கத் தொடையின் மேல் வலது காலையும் மடித்துவைத்து, அழகாக பெருமை பொருந்திய இரு கைகளையும் மடித்த கால்களின் முட்டிகள் மேல் வைத்தபடி நிமிர்ந்து நேராக உட்கார்ந்திருப்பது பாரெல்லாம் போற்றிக் கொண்டாடும் பத்மாசன நிலையாகும்.

தாமரைபோல் உடலை இருத்தி நிமிர்த்தி இருப்பதால் இதற்குப் பத்மாசனம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாமரை இரவில் மலராது. அதுபோல் புலனடக்கம் இல்லாதவர்களுக்கு இறை உணர்வு தோன்றாது. லலிதா சகஸ்தர நாமத்தில் தேவியை “பத்மாசன ஸ்திரனர்த்தியே” என வர்ணிக்கும் அளவுக்கு பத்மாசனம் முக்கியம் பெறுகின்றது. இந்த ஆசனத்தைச் செய்வதால் குதிக்கால் வலி, இடுப்புப் பிடிப்பு, நரம்பு தொடர்பான நோய்கள், சீரணக் கோளாறு, அடிவயிற்றுப் பிரச்சனைகள் என்பன தீரும். ஆழ்ந்த சுவாசம் கிடைக்கும். சந்திரகலை, சூரியகலை மூச்சோட்டம் உணர ஏதுவாக இருக்கும். பிராணாயாமத்தில் பல வகைகளைப் பயிற்சி செய்யச் சிறந்த ஆசனம்.

பத்திராசனம் பற்றிக் கூறும் பாடல் எண் 560



“துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல் வைத்து
அரிய முழந்தாளில் அங்கைகளை நீட்டி
உருகியிடும் உடல் செவ்வே இருத்திப்
பரிசு பெறுவது பத்திரா சனமே”

குற்றமற்ற வலது காலை இடது பக்கத் தொடை மேலே வெளியே தெரிய மடக்கி வைத்து, அருமையான முழங்கால்கள் மேலே அழகிய கைகளை நீட்டி தளர்ந்த உடலை நேராக நிமிர்த்திச் சரியாக நிமிர்ந்த நிலையில் இருக்கச் செய்து, அதாவது வளையாமல், உயிருக்கும், உடலுக்கும் நன்மையான பரிசைப் பெறச் செய்வது பத்திராசனமாகும்.

இந்த ஆசனம் செய்வதால் ஆண், பெண் இருபாலாருக்கும் சன்ன உறுப்புக்களின் நோய்கள் நீங்கும். பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் நீங்கும். குக்குட ஆசனம் பற்றிக் கூறும் பாடல் எண் 561

“ஒக்க அடியினை ஊருவில் ஏறிட்டு
முக்கி உடலை முழங்கை தனில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசனம் கொள்வதும் ஆமே”

இரண்டு பாதங்களையும் ஒரே மாதிரித் தொடையின் மேல் இருத்தி, முக்கி உடம்பை முழங்கை மேல் தூக்கி நிறுத்தி, உடம்பின் பாரம் கைகளில் தாங்குவதைச் சரியாக உணர்ந்து, சமநிலையில் அசையாது இருப்பது குக்குட ஆசனத்தில் கொள்ள வேண்டிய நிலையாகும். (இந்த ஆசனம் கோழியுருப் போலக் காணப்படுவதால் குக்குட ஆசனம் எனப்படுகிறது.)
சிம்மாசனம் பற்றிக் கூறும் பாடல் எண் 562

“பாதம் முழந்தாளில் பாணிகளைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந்து அழகுறக்
கோதில் நயனம் கொடிமூக்கிலே உறச்
சீர்திகழ் சிங்காதனம் எனச் செப்புமே”

இரண்டு கால் பாதங்களை முழங்கால் மேல் வைத்து, அதன் மேல் கைகளை நீட்டி, அன்போடு வாயைத் திறந்து கொண்டு, அழகுடன் குற்றமில்லாத கண்களைப் புருவமத்தியில் மூக்கு நுனியில் நிலைக்கச் செய்வது பெருமை உடைய சிம்மாசனம் என்று சொல்லப்படும்.
ஆசனங்கள் நூற்று இருபத்தாறு பற்றிக் கூறும் பாடல் எண் 563

“பத்திரம் கோமுகம் பங்கயம் கேசரி
சொத்திரம் வீரம் சுகாதனம் ஓர்ஏழும்
உத்தம மாம்முது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பல ஆசனமே”
பத்திராசனம், கோமுகாசனம், பத்மாசனம், சிம்மாசனம், சொத்திராசனம், வீராசனம், சுகாசனம் என்னும் ஏழு ஆசனங்களோடு மேலான முது ஆசனம் ஒன்றும் சேர ஆசனங்கள் எட்டெட்டுப் பதினாறுடன் பத்தும், நூறும் சேர நூற்றி இருபத்து ஆறும், அதற்கு மேலும் ஆகும்.

ஆயுள்வேத வைத்திய நிலையம்
Ayurveda praxis
டாக்டர்.ஆனந்தி
B.S.M.S, A.M.P, S.M.P., R.M.P (Ind)
Dipl.Ayurveda(Germany)
எமது வைத்தியத்தில் சிறப்பு பக்கவிளைவுகள் ஏதும் கிடையாது.
நீரிழிவு நோய் (Diabetes) இரத்த அழுத்தம் ,அஸ்மா சளித்தொல்லை, இருமல் மூட்டுவலி, கை, கால், உழைவு, செமிபாட்டுப்பிரச்சினை, தோல்வியாதி, சிறுநீரகக்கோளாறு. உடற்பருமன் பிரச்சினை மற்றும் சலரோகத்தால் ஏற்படும் ஆண்மைக்குறைபாடுகள் குணப்படுத்தப்படும்.
Tel:02751 427 9575
Möbile: 0175 75 85 952
கடந்த 18 வருட கால அனுபவம்
Ayurveda Praxis-Am Baumrain 06 / 57319 Bad Berleburg







மித்திரன்
திருமண இலவச சேவை
உங்கள் இல்லற வாழ்வின் உற்ற துணையை
உறுதியாகத் தேடிக்கொள்ள உதவும் இலவச சேவை நமது.
தொடர்புகளுக்கு:
மித்திரா:
Tel: 02732 57372- Mobil:0176 94467170
Design: Vettimany Ltd.





# இயற்கையைக் கற்றவர்கள்




இயற்கையைக் கற்றவர்கள் என்றவுடன் ஏதோ பள்ளியிலே பல்கலைக் கழகத்திலே இயற்கை பற்றிக் கற்றவர்கள் என்று சிலர் எண்ணக்கூடும். இங்கு ஒவ்வொரு நாளும் இயற்கையை இசைவுபட்டுப் பெற்ற அறிவுடையர்களையே குறிப்பிடுகிறோம். இயற்கையோடு ஒட்டி எளிமையான வாழ்வு வாழும் மக்கள் வியக்கத்தக்க வகையிலே அது பற்றிய அறிவினைப் பெற்றுள்ளனர். வகைமாதிரிக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

2004இல் நடைபெற்ற சுனாமி இலங்கையையும் தாக்கியது. தெற்கிலங்கையில் கடலோரத்தில் ஒரு மீன்பிடிக் குடும்பம் வாழ்ந்து வந்தது. கடலையும் அதனை அண்டிய பகுதிகளையும் காலங்காலமாக மேலெழுந்த வாரியாகவும் நுணுக்கமாகவும் கண்காணித்து அதனூடாக ஒரு பட்டறிவினைப் பெற்றவர் அக்குடும்பத்தின் தலைவி. உலையூதி உலகக் கனல் வளர்க்கும் பெண் அவள். 2004 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி காலையிலே அடுப்படியிலே இருந்தபடி கடலைக் கண்காணிக்கக் கூடிய வாய்ப்புக்கொண்ட அவளுக்கு அதிகாலையில் கடல் என்னவோ வேறுபட்ட தன்மையுடையதாகத் தோன்றியது. அது தன்னுடைய உள்நடப்பினை அவளுக்கு உணர்த்தியதோ அல்லது அவளுடைய உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தியதோ தெரியவில்லை. ஆனால் அவள் தன்குழந்தைகளையும் தேவையான பொருட்களையும் எடுத்துக்கொண்டு தன்னுடைய கணவன் வந்தால் தாம் கொழும்புக் கோட்டைக்குப் போவதாக அருகிலுள்ளவர்களுக்குக் கூறிவிட்டுச் சென்றுவிட்டாள். அவள் சென்ற சில மணித்தியாலங்களுக்குப் பின்பே சுனாமி அப்பகுதிகளையெல்லாம் காவுகொண்டது.

இயற்கையோடு இசைவுபடாமல் அதற்கு ஊறு செய்து வாழும் நிலை இப்போது வையகமெல்லாம் பெருகி வருகின்றது. பூமியை அதிர வைக்கும் செயற்பாடுகள் நிறைய நடைபெறுகின்றன. குளிர்ச்சியினைத் தரும் மரங்களை ஏராளமாகத் தறித்து வெப்பத்தினைப் பெருக வைக்கின்றனர். ஆறுகளின் இயற்கையான போக்குகளை மாற்றித் திசை திருப்புகின்றனர். இவற்றின் விளைவுகளை நாம்தான் பட்டு இடர்படவேண்டி வரலாம். இயற்கையைக் கற்றவர்கள் இது பற்றிக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள். அறிவுடையார் ஆவது அறிவார் என்று வள்ளுவனும் கூறியுள்ளான்!

### நுண்கலைவித்தகி திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின்

## யேர்மனி-கிறீபீலட் நாகபூசணி பாமாலை ஒலி-ஒளி இறுவெட்டு வெளியீடு



கடந்த மாதம் 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை யேர்மனி கேவலார் நகரில் நுண்கலைவித்தகி திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் கிறீபீலட் நாகபூசணி பாமாலை என்ற ஒலி-ஒளி இறுவெட்டு கேவலார் நகரில் சிறப்பான முறையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

கிறீபிலட் நாகபூசணி அம்மனின் பிரதம குரு பூசை செய்து இவ்விழாவை ஆரம்பித்த வைத்தார். திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா அவர்களினால் இயற்றப்பட்டு அவராலேயே இசையமைக்கப்பட்டு வெளியிடப்பட்ட இவ்விறுவட்டு விழாவினை ஐரோப்பிய தமிழ் வானொலியின் அதிபரும் அகரம் சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.த.இரவீந்திரன் நெறிப்படுத்தி தொகுத்து வழங்கியிருந்தார். வரவேற்புரையை திரு.திருமதி. ஏகானந்தராஜா கலை வாணி அவர்களின் புதல்வன் வழங்கினார். லண்டனிலிருந்து வருகை தந்திருந்த மனிதநேயச் செயலபாட்டளரும் பொறியிலாளருமாகிய திரு.சர்வேசுவரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இறுவெட்டை வெளயீடு செய்ய-டோட்முண்ட் சுவீற் சில்லி உணவகத்தின் உரிமையாளர் முதல் இறுவெட்டை பெற்றுக் கொண்டார்.திரு.ஏகானந்தராஜா அவர்களினால் அறிமுகவுரை நிகழ்த்தப்பட்டதுடன் யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினைச் சேர்ந்த திரு.புத்திசிகாமணி அவர்களால் ஆய்வுரையும் மேற்படி சங்கத்தின் தலைவரும் மண் சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.வ.சிவராசா தலைமை உரை நிகழ்த்தினார்.

திருமதி.கீதா பரமானந்தம் திரு.கவிமணி குகதாசன் திரு.அம்பலவன் புவனேந்திரன் திரு.ஏலையா க.முருகதாசன் திருமதி.நகுலா சிவநாதன் திருமதி.ஏ.கலைவாணி அவர்களின் ஏற்புரையுடனும் தம்பதிகளின் இளைய புதல்வியின் நன்றியுரையுடனும் விழா இனிது நிறைவு பெற்றது.


SRI OM SHAKTHI ASTROLOGICAL CENTRE



அனைத்து மதங்களும் வரவேற்க்கப்படுகின்ன..

உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.

Pandith: Thulasidasan

9 வது தலைமுறையில் கடந்த காலம் , நிகழ்காலம்,மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.

லட்சுமி பூஜை.இல்லப் பூஜை. சாந்தி பூஜை.செய்துதரப்படும். எதிரிகள் மற்றும் பொறாமைய அனைத்தில் இருந்தும் பாதுகாப்பளிக்கப்படுகின்றது.



மந்திர செய்வினைகள் சூனியம், கெட்ட, ஆவிகள் ஆகியவற்றில், இருந்து விடுதலைபெற்று நிவாரணம் பெற, வாழ்நாள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. வேதத்தீர்வுகள்.கல்வி, காதல், தொழில்,பதவி உயர்வு, நீதிமன்ற வழக்கு,உடல் நலம், குடும்பப்பிரச்சினை,திருமணம்,காதல் விவகாரம், குழந்தைப்பாக்கியம்,கணவன் மனைவி ஒற்றமையின்மை, இன்னும் பல..

மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.

08:00 am to 8.00 pm Private and confidential


Heiderstr., 45476 Mülheim
(Bushaltestelle: Steinmetzstr)

0049(0)151 63222251
0049(0)152 18133859



யேர்மனியில் பிராங்பேட் நகரில்

JAFFNA BASAR



உரிமையாளர்: நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்

ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

சித்திரம் Tv எம்மிடம் கிடைக்கும்

Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main


SIVA MALERBETRIEB
வீடுகள் திருத்தும் வேலையில் நிபுணர்கள்!
வீட்டுக்கு மாபிள் பதித்தல்
வர்ணம் பூசல், மற்றும் சுவர் அலங்காரம்
திருத்த வேலைகள்,அனைத்திற்கும்
நாடுங்கள்
28.06.2017 புதன்கிழமை
மங்கலகரமான
திறப்புவிழா
Tel:0172-5161018
Design:Vettimaniy
Westerbleich Str.77- 44147 Dortmund


DESIGN: JEYVIN 01775 40 50 80
ஸ்ரீ
வெங்கடேஸ்வரப்பெருமாள்
திருக்கோயில் ஹம்
அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமறநிறைந்திருக்கும் ஸ்ரீமந் நாராயணனின் கலியுக அவதாரமாம் ஸ்ரீ வெங்கடேஸ்வரப்பெருமாள் வந்தாரை வாழவைக்கும் புண்ணிய பூமியாம் ஜெர்மனியில் முதன்முதலாக எழுந்தருளி ஒளிவீசி அருள் ஆட்சி செய்து திருவுளம் கொண்டு மிக்கநேர்த்தியாய் தனது பரிவார தெய்வங்களோடு வேண்டுவன வேண்டிநிற்கும் பக்தர்களுக்கு தனது அருட்கடாட்சத்தினை வாரிவழங்கி வருகின்றார்.
Sri Venkateswara perumal Tempel e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte
Germany
Tel: 02381 42 66 420
+49 (0)176 80 56 96 09
Facebook:
Sri Venkateswara Perumal Tempel e.V
Linie: 7-17
Haltestellen: von Neue Bahnhofstr. bis St.Marien-Hospital
Linie: 1-3-6-18-21-22-30-31-R41
Haltestellen: von HBf- Willy-Brandt-Platz bis Alte Synagoge / Markt
Öffnungszeiten:
Täglich von 09:00 – 13:00 Uhr
und 17:00 – 20:00 Uhr
Puja Zeiten:
Täglich von 10:00 und 18:00 Uhr

Warendorf மாவட்டத்தில்

# மாபெரும் அங்காடி

# M point Supermarkt

M POINT Supermarkt

e.mail: mpointsupermarkt@yahoo.de




துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER

Email : shansure7480@yahoo.de

உடனுக்கு உடன் இறக்குமதி
செய்யப்பட்ட
மரக்கறிவகைகள்
கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப்
பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்












M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

Tel: 02583 30 30 300    0179 48 555 54



வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 12ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்



# புனித திருத்தலங்களை நோக்கிய
# திருயாத்திரை 2017





**புதுமைமிகு லூர்த் அன்னைத் திருத்தலம் நோக்கிய திருயாத்திரை**

17.07.2017 முதல் 20.07.2017 வரை (4 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 140€ மட்டுமே
14.08.2017 முதல் 18.08.2017 வரை (5 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 150€ மட்டுமே
21.08.2017 முதல் 25.08.2017 வரை (5 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 150€ மட்டுமே




**போர்த்துக்கல் புனித பாத்திமா அன்னைத் திருத்தலம் நோக்கிய திருயாத்திரை**

01.08.2017 முதல் 09.08.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 395€ மட்டுமே
14.08.2017 முதல் 22.08.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 395€ மட்டுமே

**ரோம் புனித வத்திக்கான் நோக்கிய புனிதப்பயணம்**

22.07.2017 முதல் 30.07.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 395€ மட்டுமே





**இறைமகன் அவதரித்த**
**ஜெருசலேம் புனிதப்பயணம்**

23.10.2017 முதல் 29.10.2017
வரை (7 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி
உட்பட 1250€ மட்டுமே





தொடர்புகளுக்கு: J.Ranjith 0049 21 51 600 2101 / 0049 173 406 5946

# மழலைச் சொல் கேளாதவர்

[முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்]



சென்ற வைகாசி மாதம் மூன்று நாட்கள் நாகர் கோயிலில் (கன்னியாகுமரி மாவட்டம்) அனைத்துலகத் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. ஏறக்குறைய பத்து நாடுகளிலிருந்து ஆங்வாளர்கள் கலந்துகொண்டார்கள். இந்தியாவிலிருந்து பல ஆய்வாளர்கள் கலந்து சிறப்பித்தனர். இலங்கையிலிருந்து நானும் எனது கணவரும் கலந்துகொண்டோம். ஆய்வு மாநாடு என்ற வகையில் அதனைத் திட்டமிட்டு சென்னை ஆசியக் கற்கை நிறுவகமும் மொரிசியஸ் உலகப் புலம்பெயர்ந்தோர் மன்றமும் இணைந்து சிறப்பாக அரங்கேற்றியிருந்தன. 150க்கு மேற்பட்ட திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அங்கு பொது அரங்குகளிலும் குழுநிலை அரங்குகளிலும் படிக்கப்பட்டன. இவை மாநாட்டின் தேவையையும் இலக்கினையும் வையகத்திற்குச் சிறப்பாகவே எடுத்து இயம்பின. மாநாட்டின் கருப்பொருளும் 'திருக்குறளின் உலகப்பொதுமை' என்ற கோட்பாட்டையே எடுத்துரைப்பதாக வரையறை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.

அனைத்துலகத் திருக்குறள் மாநாடு என்ற வகையில் திருக்குறள் மாநாடு அமைவதற்கு அதன் பல்வேறு நாட்டு மொழிகளின் மொழி பெயர்ப்புகளும் ஒரு சிறப்பான காரணமாக அமைந்து இருந்தது.
தமிழின் செம்மொழி இலக்கியமான திருக்குறள் 90க்குமேற்பட்ட மொழி பெயர்ப்புகளைக் கொண்ட தனிப்பெருமை படைத்த தமிழ் நூலாகவும் விளங்குகிறது. ஆங்கில மொழியில் மட்டும் ஏறக்குறைய 40 மொழி பெயர்ப்புகள் திருக்குறளுக்குச் செய்யப்பட்டுள்ளன. இது திருக்குறளின் ஆழமான பொருளை எடுத்துரைக்க ஆங்கில மொழியின் ஆற்றல் போதாமல் இருப்பதையும் மறைமுகமாகச் சுட்டிநிற்கிறது.

ஏனைய நாட்டு மொழிபெயர்ப்புகளும் இப்போது ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து அந்தந்த நாட்டு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டவையாகவே பெரும்பாலும் உள்ளன. ஆனால் 21ஆம் நூற்றாண்டு இந்நிலையை மாற்றும் சிறப்பான நூற்றாண்டாக விளங்குகிறது. குறிப்பாக வையகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இளைய தலைமுறை தத்தம் வாழிட மொழியிலே உயர் கல்வியைக் கற்ற புலமையாளர்களாக உருவாகியுள்ளனர். அவர்கள் தமது தாய்மொழியையும் தொடர்ந்து 12 ஆண்டுகள் கற்றுத் திறமையாகத் தேர்ச்சியும் பெற்று உள்ளனர். அதனால் திருக்குறளை மூல மொழியிலே கற்கும் அரிய வாய்ப்பினையும் பெற்றுள்ளனர். எனவே இதுவரை வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்புகளின் குறைகளைக் களையவும் நிறைகளை எடுத்துரைக்கவும் வல்லுநர்கள் பலர் தோன்றிவிட்டார்கள்.

## தமிழ்நாட்டிலே 1330 குறட் பாக்களையும் மனப்பதிவு செய்துள்ளவர்களாக ஏறக்குறைய 20 சிறுவர் உள்ளனர்.

இந்நிலையில் சென்ற மாதம் அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டில் ஒரு சிறப்பான நிகழ்வும் அரங்கேறியது. வள்ளுவரின் குறட் பாக்களை மனப்பதிவு செய்து கற்பிக்க, ஒரு சிறுவன் தன் ஆற்றலைப் பொது அரங்கிலே அமைதியாக ஆற்றுகை செய்தான். திருக்குறளின் அதிகாரப் பெயரைக் கூறி அதன் உள்ளடக்கமான குறட் பாக்களையும் தனது மழலைக் குரலிலே தவறின்றி அழகாக ஒப்புவித்தான். 1330 குறட் பாக்களையும் அச்சேற்றியது போல அவன் மனதிலே பதிவுசெய்து வைத்திருக்கிறான். வள்ளுவர் குறள் வாய்மொழியாகவே பல காலமாகப் பயிற்றப்பட்ட நிலைக்கு அச்சிறுவன் சான்றாக அரங்கிலே நின்ற கோலம் அனைவரையும் கவர்ந்தது. எட்டுவயதான சிறுவன். சிவசஞ்சைய் என்ற அழகிய பெயர் பெற்றவன். ஆண்டு மூன்றிலே பள்ளியில் பயிலும் இளம் பிஞ்சு. அவனால் அவன் கற்கும் பெல்ஃபீல்டு மெட்ரிக் பள்ளி பெருமையுடன் ஆசாரிப்பள்ளத்திலே தலை நிமிர்ந்து நிற்கிறது. திருக்குறளை அவன் மனப்பதிவு செய்யப் பயிற்றியவள் அவனைக் கருவிலே சுமந்து பெற்றெடுத்த தாய் ராதா. அவன் ஆற்றல் கண்டு தந்தை பொன். சுபாஸை எல்லோரும் வியந்து நோக்கினர். சிவசஞ்சைய் வாழும் வைரவா குடியிருப்பு உள்ள எறும்புக்காடு என்னும் ஒரு சிற்றூர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளது. திருக்குறளைக் கற்க இச்சிறுவனின் பயில்நெறி சிறப்பாக வழிகாட்டுகிறது.
தமிழ்நாட்டிலே 1330 குறட் பாக்களையும் மனப்பதிவு செய்துள்ளவர்களாக ஏறக்குறைய 20 சிறுவர் உள்ளனர். அவர்களில் இம் மாநாட்டில் தன் திறனை அரங்கேற்றிய சிறுவனின் குடும்பத்தையே இன்று எல்லோரும் காண விழைவர். இவ்வாறு எதிர்காலத்தில் பல சிறுவர் உருவாகவேண்டும். அதுவே உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் பணியை எல்லோரும் தொடர ஒரு நல்வழி ஆகும்.




# நேற்றைய குமரிகளும் இன்றைய கிழவர்களும்




இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்

தனிமையை விரட்டுவதற்காய் சற்றுத் தளர்வாக இருக்கையில் சாய்ந்துகொண்டு குட்டித்திரையை முடுக்கினால் வண்ணத்திரை கறுப்பு வெள்ளைக்குள் கரைந்து விடுகிறது. மேற்கத்தைய ஆட்டத்தில் அன்றைய சின்னவர் எம்.ஜி.ஆரும் கன்னடத்துப் பைங்கிளி பி. சரோஜாதேவியும் டி.எம்.சௌந்தரராஜனிடமும் பி.சுசிலாவிடமும் குரல்களை இரவல் வாங்கி வைத்துக்கொண்டு ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு தாங்களும் மயங்கி பார்க்கும் இளசுகளையும் மயங்கவைக்கும் காரியத்தில் முனைந்திருக்கிறார்கள்.

....அன்று வந்ததும் இதே நிலா இன்று வந்ததும் அதே நிலா
என்றும் உள்ளது ஒரே நிலா இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா...!

"ன் இருபதுகளில் நான் பார்த்து இரசித்த அந்த இணையர் இப்போதும் அதேபோலவே"

காட்சியில் மாற்றமின்றி குட்டித்திரையில் நிழலாக!

ஆனால் நான்..?

அதே எம்.ஜி.ஆரையும் சரோஜாதேவியையும் அதே இருபதுவயது இளைஞ னாக இப்போது கண்டு களிக்க முடிகிறதா? முடிகிறது என்றால் என்னுள் இருக்கும் அந்த இளைஞன் இன்னும் சாகவில்லை என்று அர்த்தம். முடியவில்லை என்றால் முதுமையை நான உணர்கிறேன் என்று அர்த்தம்.

குட்டித்திரையில் நிகழ்ச்சிகள் மாறுகிறது...

எம். ஜி ஆருடன் ஆடிக்கொண்டிருந்த சரோஜாதேவி என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு ஒரு அம்மையார் தன் கடந்த காலங்கள் பற்றிப் பேசுவதற்குத் தயாராகிறார்.

எம்.ஜி.ஆரைப்பற்றிப் பேசும்போது அவரது கண்களில் நீர்க்கசிவு.

திரையில் இன்னும் சின்னப்பெண்ணாக ஓடியாடிக்கொண்டிருக்கும் அந்தக் கனவுக்கன்னி, இளமையின் ஒப்பனையின்றி தன் கடந்தகால அனுபவங் களைப் பகிர்ந்துகொள்ளும ஓர் அம்மையாராக...?

தன்னை மறந்து „கடவுளே...!" என்று முணுமுணுக்கின்றன என் உதடுகள்.

காலகாலமாக நிகழ்ந்துபோகிற இயற்கையின் மாற்றங்களைக் கவனிக்காதவனாய், வயதுகளில் உருவங்களில் ஏற்படும் வித்தியாசங்களைக் கணக்கில் கொள்ளாதவனாய் நேற்றைய வாழ்வின் தொடர்ச்சியாய் இன்றைக்கு, இன்றைய வாழ்:வின் தொடர்ச்சியாய் நாளைக்கு என்று நகர்கின்ற வாழ்வோடு ஓடிக்கொண்டு.. எல்லாநாளும் ஒன்றுபோலவே...!

அடுத்தவர்களைப் பார்த்து ஆச்சரியப்படும் மனம் தானும் அவ்:விதமே மாற்றங்களைக் கடக்கிறேன் என்பதை உணர்த்துவதில்லை.

திரைப்படங்களில் ஒப்பனையிட்டு உருவத்தை மாற்றுவதுபோல் நிஜவாழ்விலும் உருவங்கள் மாறுகின்றன. நேற்றைய கனவுக்கன்னியை இன்று அம்மையாராகப் பார்த்ததும் பரிதவித்துப் போகிற மனது தன்னிலை உணரத் தவறிவிடுகிறது. கண்ணாடிக்கு முன்னால் போய் நிற்கும் போதுதான் தானும் காணாமல் போயிருப்பது தெரிகிறது.

குட்டித்திரையில் நடுத்தரவயதைக்கடந்த ஒரு நடிகரின் பேட்டி.

„உங்களை இளவயதில் கவர்ந்த கதாநாயகி யார்?"

பட்டென அவரிடமிருந்து ஒரு பதில் வருகிறது-

„சரோஜாதேவி!"

**அன்று .... நாம் சந்தித்த சரோஜாதேவியின் சாயலைக்கொண்ட பெண்கள்...**

அந்தப் பெயரைச் சொல்லும்போது அவரது கண்களில் தோன்றும் பிரகாசம். முகத்தில் தெரிகிற ஒரு பரவசம். உதடுகளில் நெளியும் புன்னகை. பதினெட்டு வயது இளைஞனாக அவர் இருந்த காலத்துக்குப் பறந்துவிட்டார் அவர் என்று தெரிகிறது.

„இன்னொரு கதாநாயகியின் பெயரைச் சொல்லுங்களேன்!"

„அதுவம் சரோஜாதேவிதான்!"

வேறு எவரையும் தனது கனவுக் கன்னியாக ஏற்றுக்கொள்ள மறுக்கிற மனம்.

சரோஜாதேவிமீது மட்டும் ஏன் இத்தனை பிரியம் காட்டுகிறது.?

காரணம் சரோஜாதேவிமட்டும் அல்ல.

அவரைத் தன் கனவுக்கன்னியாக அவர்வரித்தக்கொண்ட காலச் சூழலில் அவரது பருவத்தோடிணைந்த உணர்வுகள், அவரது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள், அவர் சந்தித்த சரோஜாதேவியின் சாயலைக்கொண்ட பெண்கள் இவையெல்லாம் அவர் மனத்தில் ஆழப் பதிந்துபோயிருக்கும். அவைகளே நீங்காத நினைவுகளாய் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கும்போது சரோஜாதேவியும் அங்கே நிரந்தரமாகியதில் வியப்பில்லை. உலகம் ஒரு நாடகமேடை வாழ்க்கை எனும் நாடகத்தில் மனிதர்கள் எல்லோரும் நடிகர்கள் என்று ஒரு ஆங்கில அறிஞன் எழுதினான் என்பார்கள்.




இப்போது நாடகங்களுக்குப் பதிலாக குட்டித் திரைகள் பெருகிவிட்டன. நெடுந்தொடர்கள் மலிந்துவிட்டன. ஆகவே உலகம் என்பது குட்டித் திரையாகவும் வாழ்க்கை என்பது நெடுந்தொடர்களாகவும் மாறிவிட்டது எல்லா மனிதர்களும் அழகாக நடிக்கவும் கற்றுக்கொண்டு விட்டார்கள்.

பச்சைமண் முதல் பழுத்த கிழம்வரை தத்தம் பாத்திரங்களை அழகாக நடித்து வாழ்க்கை எனும் நாடகத்தை சுவையாக நகர்த்திக் கொண்டிருக் கிறார்கள்.ஒப்பனைகளைக் காலம் கவனித்துக்கொண்டிருக்கிறது.

„பாட்டுக்குப் பாட்டெடுத்து நான் பாடுவதைக் கேளாயோ..
துள்ளிவரும் வெள்ளலையே நீபோய்த் தூதுசொல்ல மாட்டாயோ..!"

தொடர்ச்சி 31 ம் பக்கம்



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
ஆடிமாத மலிவு விற்பனை
Westendorf Str.41 - 44287 Dortmund
எமது மலிவு விலைகளை அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
info@milinimpex.de
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்

பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Web :www.milinimpex.de
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# வல்லரசா நல்லரசா ! இது முதல்வர் ஆசையா?





சென்னை: முதலில் விவசாயிகளுக்கான நல்லரசு நாடாக இந்தியா மாற வேண்டும் என்றும் வல்லரசாக மாறுவதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் விஜய் கூறியுள்ளார். சென்னையில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் விஜய் கலந்துகொண்டார். அப்போது பேசிய அவர், நாம் நன்றாக இருக்கிறோம் ஆனால் நமக்கு சோறு போடும் விவசாயிகள் நன்றாக இல்லை என கவலை தெரிவித்தார். மேலும் 3 வேளை உணவு சுலபமாக கிடைப்பதால் அதன் மதிப்பு தெரியாமல் போய்விட்டது என்று கூறிய விஜய், அடுத்த சந்ததிக்கு உணவு இல்லாமல் போகும் நிலை ஏற்படும். எனவும் அரிசியை உற்பத்தி செய்த விவசாயிகள் அதை இலவசமாக பெற ரேஷன் கடையில் வரிசையில் நிற்கிறார்கள் என்றும் கூறினார். விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம் மட்டுமல்ல, அவசரமும் கூட எனவும் முதலில் விவசாயிகளுக்கான நல்லரசு நாடாக இந்தியா மாற வேண்டும். வல்லரசாக மாறுவதை பிறகு பார்க்கலாம் என்றார் நடிகர் விஜய்

## எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு

கையில் சபாஷ் நாயுடு படம் மட்டுமே உள்ளது.
சுந்தர் சி.யின் சங்கமித்ரா படத்தில் இருந்து ஸ்ருதி வெளியேறிவிட்டார். முழுமையான திரைக் கதையை அளிக்கவில்லை என்று காரணம் கூறியுள்ளார். இந்நிலையில் சினிமா குறித்து அவர் கூறியதாவது,
எனக்கு ஸ்டார் என்ற வார்த்தை பிடிக்காது. அந்த வார்த்தையோடு நிறைய மனவழுத்தமும் சேர்ந்து வருகிறது. நான் விரும்புவதை செய்வதற்கு நல்ல சம்பளம் பெறுபவராக என்னை கருதுகிறேன். (தனூக்கு ஸ்டார் என்று அழைப்பது பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது) எனக்கு கடவுள் நம்பிக்கை அதிகம். இந்த கடவுள் விடயத்தில் அப்பா பிள்ளையல்ல நான்.நான் கடவுள் பிள்ளை. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ள மாட்டேன். என் வாழ்வில் பல சங்கடங்களை கடவுளின் அருளால் கடந்து வந்துள்ளேன்.
என் அப்பா கமல் ஹாஸன் தான் என் சூப்பர் மேன்.
சபாஷ் நாயுடு படத்தில் அப்பாவுடன் சேர்ந்து பணியாற்றுவது எனக்கு கிடைத்த கவுரவம். அவர் என் வேலையில் திருப்தியாக இருப்பது எனக்கு பெருமை. நடிகைகள் நடிகைகள் பிற நடிகைகளுடன் என்னை ஒப்பிடுவது நடிக்க வந்த புதிதில் கஷ்டமாக இருந்தது. ஆனால் தற்போது எனக்கு அதை பற்றி கவலை இல்லை.ஸ்ருதி.




## அனுஷ்காவுக்கு விரைவில் திருமணம்

அனுஷ்கா புத்தூர் ஸ்ரீ மகாலிங்கேஸ்வர கோவிலுக்கு சென்று வழிபட்டுள்ளார். அனுஷ்காவுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர் விரும்புகிறார்கள். மாப்பிள்ளை பார்க்கும் வேலையை கூட துவங்கிவிட்டார்களாம். பெற்றோர் ஒரு பக்கம் மாப்பிள்ளை பார்க்க அனுஷ்கா மறுபக்கம் படங்களில் பிசியாக உள்ளார். இதற்கிடையே அனுஷ்காவுக்கும், பிரபாஸுக்கும் இடையே காதல் என்று வேறு கிசுகிசுக்கப்படுகிறது. திருமண தடை நீங்க வேண்டி அவர் மூகாம்பிகை கோவிலுக்கு சென்றதாக கூறப்பட்டது.





## நேற்றைய குமரிகளும்... 29 ம் பக்கத் தொடர்ச்சி....





வாலியின் கவிதை வரிகளைச் சுமந்துவரும் சுசீலாவின் மயக்கும் குரலுக்கு வாயசைத்துக் கொண்டு எம்.ஜி.ஆரைத் தேடிவரும் கன்னடத்துப் பைங்கிளி...
„ ஏன் இவ்வளவு சத்தம்? உங்கடை இரசனைக்கு ஒரு அளவு கணக்கில்லையா? ஒருநாளைக்கு ஒருதடவையாகிலும் சரோஜாதேவியைப் பார்க்காட்டில் உங்களுக்கு நித்திரையே வராதா? எத்தினை வயசப்பா உங்களுக்கு?"
அடுத்த அறைக்குள்ளிருந்து வரும் மனைவியின் எச்சரிக்கைக் குரல்.
சத்தத்தைக் குறைக்காவிட்டால் சரோஜாதேவியைப் பார்ப்பதும் உடனடியாகத் தடுக்கப்பட்டு விடும் என்பதை ஏற்கனவே அனுபவப்பட்டிருந்ததால் சுசீலா குரலைத் தணித்துக்கொண்டார். கூடவே பாடிக்கொண்டிருந்த சௌந்தரராஜனும்தான். இப்போது எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் எனக்குமட்டுமே கேட்கத்தக்கதாக பாடத் தொடங்கினார்கள்....

„.....வாழைப்பூத் திரியெடுத்து வெண்ணெயிலே நெய்யெடுத்து
ஏழைமனக் குடிசையிலே ஏற்றிவச்சான் ஒரு விளக்கு...
ஏற்றிவச்ச கைகளிலே என்மனசை நான் கொடுத்தேன்
நெஞ்சம் மட்டும் அங்கிருக்க.. நான்மட்டும் இங்கிருக்கேன்..!

இளமை அனுபவங்கள் ஒரு வயதுக்குமேல் நீடிப்பது அழகல்லத்தான் என்று நிகழ்காலம் வலியுறுத்துகிறது. ஆனால் அவைகளை மீட்டுப் பார்ப்பதற்கென்றே முதுமையைக் காலம் தந்திருக்கிறதே. என்ன செய்யலாம்? வாழ்க்கை வாழ்வதற்கு மட்டுமல்ல. இரசிப்பதற்கும் தான்!
இறந்தகாலம் எதிர்காலத்தில் இரசனையுடையதாக இருக்கவேண்டுமானால் நிகழ்காலத்தை நிறைவானதாக வாழவேண்டும் என்பதே இயற்கை கற்றுத்தரும் பாடம்.




Hückelhoven நகரில்

துரித பணமாற்றுச் சேவை

**Asiatischer Super markt**

**ஆசியா சமுத்திரம்**

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் –
வீட்டுக்குத்தேயையான
மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும்
மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30


R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan



TEMPO Money Transfer
VALUTRANS Money Transfer
Ria Money Transfer
MoneyGram money transfer






Rathy Jewellers Ltd
The Leading Jewellery store in London with the largest selections
அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm
எமது புதிய கிளை
UNIT 6
Plaza Parade29-33
Ealing road
Wembley HA0 4 YA
Tel: 0208 9000 818


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
கோடை கால விடுமுறை 2017
பதிவுக்கு முந்துங்கள்
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
Jasmine Silk House
காஞ்சிபுரம் நம்பர் 1 பட்டு
சாறிகள் நம்மிடம் கிடைக்கும்
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
உரிமையாளர்:
பா.கணேஷ்


வீட்டுக்கடன்
1,0%
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany